உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 34 | இராக்ஷச - ஆனி - 10—7—75 | இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## கல்விப் பயன்

### கல்விப் பொருள் :

கல்வி என்பது, 'கல்லுதல்' என்ற வினையிலிருந்து எழுந்த அழகிய சொல். தோண்டுவது, அகழ்வது என்று பொருள் படும். அறியாமையை அகழ்ந்து எடுத்து அறிவு வழங்குவதால் 'கல்வி' என்றனர் பழந் தமிழர். நம்நாட்டுக் கல்வியில் சிறுவர் பயிலும் தொடக்கக் கல்வியினிருந்தே ஒழுக்கம் பண்பாடு சமயம் முதலிய அனைத்தும் பயிற்றுவிக்கப் பெறுகின்ற நிலை உள்ளது; இது வேறெங்கும் காணவியலாத சிறப்பென்று கூறுவது மிகை யாகாது. பின்னர்ப் பயிலப்பெறும் பலதுறைக் கல்வி நிலையிலும் இவ்வாறே.

### பிற நாட்டிலும் நம் நாட்டிலும் :

பிறநாட்டுக் கல்விகளோ உலகியற் கல்வியளவில் நின்று விடக் காண்கின்றேம். வெறும் உலகியல் அளவில் நின்றுவிடும்

கல்வியால் உயர் பயன் விளைந்துவிட முடியுமா? அந்நிலையிலேயே பலதுறைக் கல்விகளும் ஆங்கு நிலைபெறக் காண்கின்றோம். ஆதலால் நாம்பிறப்பெடுத்த இலட்சியத்தை நிலைநாட்டும் முறை அக்கல்வியில் இல்லாமற் போய்விடுகின்றது. சமயக்கல்வி பெறவேண்டும் என்று எண்ணுவோர் அவரவர் தாமே முயன்று தனியே கற்கவேண்டிய நிலையினை அங்குக் காண்கின்றோம். நம் நாட்டுப் பழையகல்வி முறையில் அவ்வாறு இல்லை; தொடக்க முதலே சமயம், பண்பாடு ஒழுக்கம் இவை பிணைந்தே வருகின்ற பெருநிலை நம்நாட்டுக் கல்வியின் பெருஞ்சிறப்பு என்று கூறலாம்; இது நாம் கூறுவது மட்டுமன்று; கற்றறிந்த மேலைநாட்டினரும் வியந்து பாராட்டுவது கண்கூடு. இதன் பயனாக மன அமைதியும் ஒருமைப்பாடும் பிற உயிர்க்கு இரங்கும் பண்பும் நம்மிடையே வேரூன்றி வளர்வதாயிற்று. இன்று அதுவும் நாட்டு மக்களிடையே நிலைத்து நிற்பதற்கு உதவிவருகின்றது.

### மீண்டும் வருக :

இப்பொழுது நிலவும் நம்நாட்டுக் கல்வி முறையில் அவரவரும் தம்முடைய உலகியல் வாழ்வு முன்னேறுவதொன்றையே கருதும் நிலை உள்ளது; இந்நிலை மாறவேண்டும். சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் பயன் பெறத்தக்கமுறையில் பயில்விக்கும் கல்வித் திட்டத்தை அமைத்திடவேண்டும் என்ற ஆர்வம் நம்மனோர்க்குப் பெருகுதல் வேண்டும். பண்டைக் காலநிலை போன்று சமயம், ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றை இணைத்துக் கற்கும் முறை மீண்டும் வருதல் வேண்டும்; அப்போதே பழைய மாண்புநிலை கல்வித்துறையில் மீண்டும் திகழும் என்பது ஒருதலை.

### பல நிலைகளில் :

தொடக்கக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, ஆராய்ச்சிக் கல்வி ஆகிய பல நிலைகளிலும் சமயம் முதலிய பண்பாட்டு நிலை கலந்து கற்பிக்கப்பெறுமேல், கல்வியாளர்கள் அஞ்சுகின்ற சூழ்நிலை அரும்பிடாது; மாணவர்கள் கல்வி ஒன்றிலேயே கருத்தூன்றிக் கற்பர்; வேறு பலவற்றில் கவனம் செலுத்தக் கூடிய நிலை வாராது.

### கல்விப் பயன் :

“மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார்”

என்று குமரகுருபர சுவாமிகள் கூறியருளிய தன்மைகளெல்லாம் வரப்பெற்றுக் 'கருமமே கண்ணாக' நின்று கற்பர். "கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே" என்று திருவள்ளுவர் கூறும் உண்மை நெறிப் பயனை உணர்வர். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற நன்னெறி தலைப்பட்டுத் திருக்கோயில் வழிபாடு முதலியவற்றை வற்புறுத்தலின்றித் தாமே மேற்கொள்வர். ஐயந்திரிபறக் கற்றுக் கல்விப் பயனை எய்துவர்; கற்ற நூற்பயன் யாது? அறம் பொருளின்பம் வீடு ஆகியவற்றைப் பெறுதலன்றோ? அந்நிலையை எளிதின் எய்துவர். குமரகுருபரர் கூறியவாறு, "சிற்றுயிர்க்குற்ற துணை" கல்வியொன்றே எனக்கண்டு கல்வியை உறுதுணையாகக்கொண்டு, கல்வியின் மெய்ப்பொருளைக் காண்பர். ஆம்; அதுவே இளைஞர் மனத்துக் கல்விப் பயனை ஊன்றும் வழி அந்நெறி நின்று மாணாக்கர் உலகம் கல்விப் பயனை எய்திச் சிறக்குமாக.

## தருமையாதீனத்தில் திருமுறை வகுப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் திருமுறைப் பயிற்சிக்காகத் தேவார பாடசாலை ஒன்று இலவச உணவு உறையுள் வசதிகளுடன் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவருவதை அனைவரும் அறிவர். மேலும் ஆதீன அலுவலர்கள் பிள்ளைகளுக்கும் தொடக்கப்பள்ளி, உயர்பள்ளிகளில்பயிலும் மாணவர்களும் திருமுறைப் பயிற்சி அளிக்கவேண்டும் என்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளங்கொண்டார்கள். அதன்படி, தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை திருக்கோயிலில் தருமையாதீனத் தேவார பாடசாலை ஆசிரியர், திரு. R வேலாயுத ஓதுவார் அவர்களால் திருமுறை வகுப்பு 19—6—75 வியாழக்கிழமை மாலை 5 மணிக்குத் தொடங்கப்பெற்றது. வகுப்பில் தருமபுரத்தில் உள்ள சுமார் நாற்பது மாணவ மாணவியர்கள் திருமுறைப் பயிற்சி பெறுகிறார்கள். வகுப்பு நாள்தோறும் மாலை மணி 5 30 முதல் 6-30 வரை நடைபெறுகிறது.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத் திருமடத்திற்கு
ஆசியக் கவிஞர்கள் வந்தபோது

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# ஆசியுரை

"வழுவிலா துன்னை வாழ்த்தி வழிபடுந் தொண்டனேன் உன்
செழுமலர்ப் பாதங்காணத் தெண்டிரை நஞ்சமுண்ட
குழகனே கோலவில்லி கூத்தனே மாத்தாயுள்ள
அழகனே ஆலவாயில் அப்பனே அருள்செயாயே" —அப்பர்

**பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் :**

ஆசியா முழுவதிலும் இருந்து கவிஞர்களாகிய நீங்கள் இங்கே ஒரு குடும்பமாக வந்திருக்கிறீர்கள். அத்தனை குடும்பங்களும் ஒன்றுசேர்ந்து வந்திருப்பது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியது "பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது போல ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஒருசிலர் வந்திருக்கின்றீர்கள். இவ்வாறு வருவது அவ்வந்நாட்டினுடைய பண்பாடு, கலை, நாகரிகம் முதலியவற்றை அறிய உதவுவதாகும். ஆசியக்கவிஞர்கள், அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியாக் கண்டங்களுக்கும்சென்று அங்குள்ள கவிஞர்களோடும் தொடர்பு கொள்ளவேண்டும். அந்நாடுகளுக்குச் செல்வது நமது நாட்டிற்கும், மொழிக்கும், கலைக்குச் சிறப்புத்தருவதாகும். அதுபோல் பிறநாட்டுக் கவிஞர்களையும் இங்கு அழைத்துவரவேண்டும். மேலும் "சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்றும், "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும், இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்"

என்றும் பாரதியார் கூறுவதுபோல் பிற நாட்டுக் கலைகளை நம் மொழியிலும், நம் நாட்டுக் கலைகளைப் பிறமொழியிலும் பெயர்த்தல் வேண்டும்.

## காலக் கண்ணாடி :

கவிஞர்கள் அவ்வந்நாட்டின் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவர்களாய் இருந்திருக்கின்றார்கள். மக்கள் வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்தவர்கள் கவிஞர்கள் அரசியல் அடிப்படையை உருவாக்குபவர்கள் ( The Makers of the constitution ) என்று கூறலாம் பழங்கால மக்கள் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குபவர்கள் கவிஞர்கள் திருவள்ளுவர் திருஞானசம்பந்தர் கம்பர், கச்சியப்பர், ஷெல்லி மில்டன் போன்ற கவிஞர் பெருமக்கள் மக்களின் வாழ்க்கை எவ்வாறு அமையவேண்டும் என்று வரையறுத்துள்ளார்கள்; நாட்டை நல்வழிகாட்டி அழைத்துச்சென்றுள்ளார்கள். மன்னர்களும், அமைச்சர்களும் மக்கள் ஆட்சித் தலைமைப் பீடத்தில் உள்ளவர்களும் பிற தலைவர்களும் இக்கவிஞர்களின் கருத்துக்களையே, தங்கள் அறவுரைகளில் மேற்கோள் காட்டி ஆட்சியை நடத்திச்செல்கிறார்கள் எனவே கவிஞர்களே நாட்டை நடத்திச் செல்கின்றார்கள் எனலாம்.

## அகவாழ்வும் புறவாழ்வும் :

நமது நாட்டில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே கவிஞர்கள் தங்கள் கருத்துக்களைக் கவிதை மூலமாக வெளியிட்டிருக்கின்றார்கள். நம் தமிழ் மொழி பழமையான நாகரிகம் வாய்ந்தமொழி. சிலப்பதிகாரம் போன்ற உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்கள் இருந்தாலும் பேச்சு நடையில் பேசப் பெறும் கருத்துக்களை உரை நடையாக ஆக்கித்தருவது பெரும்பாலும் நூறு ஆண்டுகளுக்கு முன்னர்தான் ஏற்பட்டது இதற்கு ஆறுமுக நாவலர் அவர்களே வழிவகுத்தார்கள் எனலாம். பழமையான சான்றோர்கள் தம் கருத்துக்களைக் கவிதை வடிவில் அமைத்துத்தந்திருப்பது தமிழுக்குரிய சிறப்பாகும். தமிழில் அகம் புறம் என்று மக்கள்வாழ்க்கையை இரண்டாகப் பிரிக்கின்றார்கள் அகவாழ்வை வீட்டு வாழ்வு என்றும், புறவாழ்வை நாட்டு வாழ்வு என்றும் கொள்ளலாம். அகவாழ்வு காதல்—குடும்பம்பற்றியது. புறவாழ்வு வீரம் – ஆட்சி முதலியவைபற்றியது பண்டைக்கால மக்களின் அகவாழ்வை அகநானூறு முதலிய நூல்கள் தெள்ளிதின் எடுத்து அறிவிக்கின்றன. புறவாழ்வைப்

புறநானூறு முதலிய நூல்கள் விளக்குகின்றன. அகவாழ்வு புறவாழ்வு ஆகிய இவை உலகியல்பற்றியன. இவையல்லாது ஆன்மிக வாழ்வு பற்றியும் ஒரு சிறிது சிந்திக்கவேண்டும். அது பற்றியே நம் பெரியோர்கள் கவிதை வடிவில் அவற்றைத் தெளிவாகச் சொல்லியுள்ளனர்.

## இலட்சியங்கள் நான்கு :

நாம் எங்கிருந்து வந்தோம்; எங்கே போகப்போகிறோம்; என்ன செய்துகொண்டிருக்கிறோம்; இவை எப்படி நிகழ்கின்றன என்பனபோன்றவைபற்றி எல்லாம் தமிழ்ச் சான்றோர்கள் தமது செய்யுட்களிலே விரிவாகச் சொல்லிச்சென்றுள்ளனர். அவற்றில் மனிதன் அடையும் இலட்சியங்கள் நான்கு எனக் கூறப்பெறுகின்றன. அவை, அறம் பொருள் இன்பம் வீடு என்பனவாகும். உலக கவிஞர்களுள் உயர்ந்தவராகிய திருவள்ளுவர் தமது திருக்குறளில் - முப்பாலில் அறம் பொருள் இன்பங்கள்பற்றி விளக்கியுள்ளார். அவரது தமக்கையார் என்று கருதப்படும் ஔவைப் பிராட்டியார் இவற்றோடு வீடுபேற்றையும் சேர்த்து,

> " ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
> காத லிருவர் கருத்தொருமித் — தாதரவு
> பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு "

என்ற பாடலால் இந்நான்கையும் விளக்கியுள்ளார். இவற்றில் வீடுபேறு (விடுதலை) பெறுவதையே பெரியோர்கள் முக்கியமான— முடிவான பயனாகக் கருதுகிறார்கள். நன்னூல் ஆசிரியராகிய பவணந்தி முனிவர் ' அறம் பொருள் இன்பம் வீட்டைதல் நூற்பயனே " என்கிறார் இதனால் கல்வி கற்பதன் நோக்கம் வீடுபேறு பெறுதலே என்பது வரையறுத்துக்கூறப்பெறுகிறது. இவற்றை நாமாகப்பெற முடியாது; இறையருளாலேயே பெறவேண்டும். எனவேதான் கவிஞர்கள் தங்கள் கருத்துக்களை ஆங்காங்கும் இறைவனோடு தொடர்புபடுத்தியே கூறிச் சென்றுள்ளனர்; மறந்துங்கூட இறைவனோடு தொடர்பு படுத்திச் சொல்லாமற் செல்வதில்லை.

## அருட்கவிஞர்கள் :

பழங்கால மக்களின் வாழ்க்கையைப் பிற்கால மக்களும் உணரும் வகையில் அமைத்துக்கொடுப்பவர்கள் கவிஞர்கள்.

நம் நாட்டில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே கவிகள் தோன்றின. அவற்றில் அவ்வக்கால மக்களின் வாழ்க்கையைக் கவிஞர்கள் தெளிவாக விளக்கியுள்ளனர். நமது தமிழ் மொழியில் முதல் இலக்கியமாக விளங்குவன சங்க இலக்கியங்களாகும். அவை இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், தமிழர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதைப் படம் பிடித்துக் காட்டுவனவாக – வாழ்வின் அடிப்படைச் சட்டமாக அமைந்துள்ளன. திருவள்ளுவர் தொல்காப்பியர் முதலிய கவிஞர்கள் நம் நாட்டு மக்களின் அகவாழ்வு புறவாழ்வு ஆன்மீகவாழ்வுகளை முதன்முதலில் அமைத்துக்கொடுத்தவர்கள் ஆவார்கள். அந்த அடிப்படையில் கவிஞர்கள் பலர் இலக்கியங்கள் பலவற்றைத் தோற்றுவித்தனர். அவர்களில், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மணிவாசகர் போன்ற பெரியோர்கள் அருட் கவிஞர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் சமய இலக்கியங்களையும் தோத்திர சாத்திரங்களையும் தோற்றுவித்தனர். அவற்றின் மூலம் சைவ சமயக் கொள்கைகளை மக்களிடையே பரவச் செய்தனர்.

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் :

அவர்கள் வழியில் வந்தவர்கள் ஸ்ரீ குருஞானசம்பந்தர். அவர்களால் நிறுவப்பட்டதே தருமையாதீனம். இத்தகைய சமய நிறுவனங்களின் கொள்கை, கடவுள் ஒருவர், உயிர்கள் பல. உயிர்கள் கடவுளை அடையத் தடையாக இருப்பதாகிய தளை (பாசம்) என்பது ஒன்று உண்டு என்று கூறுவதாகும். உயிர்கள் பாசத்தின் நீங்கி வீடுபேறு பெறுவதே முக்கியமாகும். ஸ்ரீ குருஞானசம்பந்தர்,

“ என்னை அறிவென்றுன் என் அறிவில் ஆனந்தந்
தன்னைச் சிவமென்றுன் சந்ததமும் — என்னை உள்ளிப்
பாரா மறைத்ததுவே பாசமென்றுன் இம்மூன்றும்
ஆராய்ந் தவர்முத்த ராம் ”

என்ற பாடல் மூலம் கடவுள், உயிர், தளை என்ற இவற்றை ஆராய்ந்தவர்கள் வீடுபேறு (விடுதலை) அடைவர் என்று குறிப்பிடுகின்றார். இவர்கள் எட்டுநூல்களை அருளிச்செய்துள்ளார்கள். அவற்றில், கடவுட் கொள்கை பற்றி விரிவாக எடுத்து விளக்கியுள்ளார்கள். எதையும் நாமே செய்யக்கூடாது; ஆசாரியர் மூலமே பெறவேண்டும் ஆசாரியரே கடவுள் என்ற கொள்கைகளையுடையவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

**அற்புதங்கள் :**

இந்தத் திருமடத்தை நிறுவியவராகிய ஸ்ரீ குருஞான சம்பந்தர் போன்ற பெருமக்கள் அற்புதங்கள் செய்ய எண்ணவில்லை. அடக்கமாக - அமைதியாக வாழ்ந்தார்கள். ஆனால் இறைவன் இந்தப்புனிதமான சான்றோர்களின் வாயிலாக இத்தகைய அற்புத நிகழ்ச்சிகளை நடத்திச் செல்கின்றான் தமது ஞானாசாரியரோடு திருக்கோயில் வழிபாட்டிற்குச் சென்று மீண்டு வருகின்றபோது கைவிளக்கு எடுக்கும் பணியைச் செய்தார் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அதன்மூலம் ஓர் அற்புதம் நிகழும் என்று அவர் எண்ணவில்லை. ஞானாசாரியரின் வீட்டு வாயிலில் ஆசிரியரின் ஆணைப்படி நின்றபோது கைவிளக்கு அணையாமலும், பெய்த மழை மேலே படாமலும் இருக்கும் அற்புதத்தை இந்தச் சான்றோர் வாயிலாக நிகழ்த்தினான் இறைவன். இத்தகைய சான்றோர்களின் அருள் வரலாறு எதற்குச்சொல்லப் பெறுகிறது? 'கவிஞர்களாகிய நீங்கள் எதுகை மோனை நயத்திற்காகக் கவிதை எழுதக் கூடாது; அருளாளர்களின் வரலாறு முதலியவற்றோடு கருத்துக்காகவே நீங்களும் கவி இயற்றவேண்டும். அருளாளர்களின் வரலாறு நாட்டு மக்களுக்கும் அவர்களது நல்வாழ்விற்கும் பெரும்பயன் அளிப்பதாகும்' என்பதையே ஸ்ரீ குருஞான சம்பந்தரின் அருளாசியாக அறிவிக்கின்றோம் இந்த அறநிலையத்தைத் தரிசிக்க வந்த நீங்கள் நலமெலாம் பெற்று வாழ ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

"I consider thst it is a red letter day in my life With the help of Thiru Sourirajan, myself, my junior and family members were a ble to get a verv good dharsan. The persons in charge of the temple can take just pride for the manner in which the temple is kept so clean in spite of so many odds. They deserve all encouragement"

10—6—75. Sd. K Venkataswami,

Addl, Govt. Pleader High court, Madras.

# நின்றியூர் நிமலற்கு லட்சார்ச்சனை

திருமகள் வழிபட்ட காரணத்தால் இத்தலம் திருநின்றியூர் என வழங்கப்படுகிறது திருநின்றியூர் என்பது வேறு; திருநின்றவூர் என்பது வேறு சோழநாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களுள் ஒன்றாக விளங்கும் தலம் திருநின்றியூராகும். மனத்தால் கோயில் கட்டி வழிபட்ட பூசலார் வாழ்ந்த தலம் திருநின்றவூராகும். இது செங்கற்பட்டுமாவட்டத்தில் உள்ளது.

இக்திருக்கோயில், தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தோடு இணைக்கப்பெற்றுள்ளது. திருநின்றியூர் மாயூரம் சீகாழி கற்சாலையில் மாயூரமிருந்து ஆறுகல் தொலைவில் உள்ளது.

இத்தலத்து இறைவர் பெயர் லக்ஷ்மிபுரீசுவரர். இறைவியார் பெயர் உலகநாயகி. தீர்த்தம் நீலதீர்த்தம். 'நீலம் மலர் பொய்கை' என்ற திருஞானசம்பந்தர் வாக்கினால் இதை உணரலாம்.

இத்தலம் சைவசமயாசாரியர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர். சுந்தரர் ஆகிய மூவர் பாடலும் பெற்ற சிறப்புடையது. மேலும் இந்திரன், அகத்தியர், பரசுராமன் ஐராவதம், பசு, சோழமன்னன் ஆகிய பலரும் இத்தலத்திறைவனை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர்.

திருஞானசப்பந்தர் திருப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் திருப்பதிகம் ஒன்றும், சுந்தரர் திருப்பதிகம் இரண்டும் ஆக நான்கு திருப்பதிகங்கள் உள்ளன. இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டு ஒன்று உள்ளது. அது சிதைந்த நிலையில் இருக்கிறது.

இத்தலச் சிறப்புக்கள் தேவாரத் திருப்பதிகங்களால் நன்கு தெரிய வருகின்றன திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவனை வழிபடுவோர் அச்சம். பாவம், கேடு, நோய் இவை நீங்கப் பெறுவர் என்பதை ஒரு பாடலால் தெளிவாகக் கூறியுள்ளார். அப்பாடல் வருமாறு:-

" அச்சம் மிலர் பாவம்மிலர் கேடும்மிலரடியார்
நிச்சம்முறு நோயும்மிலர் தாமுந்நின் றியூரில்
நச்சம்மிட றுடையார் நறுங்கொன்றை நயந்தாளும்
பச்சமுடை அடிகள் திருப்பாதம் பணிவாரே "

இக்கருத்தைத் திருநாவுக்கரசு சுவாமிகளும்,

"நெற்றிக்கண்ணுடையாரமர் நின்றியூர்
பற்றினரைப் பற்ருவினை பாவமே"

என்றும்,

"நின்றியூர் உரையினுல் தொழுவார் வினை ஒயும்"

என்றும்,

"நின்றியூர் அளியினுல் தொழுவார் வினை அல்கும்"

என்றும் வலியுறுத்திக் கூறுவதைக் காணலாம்.

"திருநாவல் ஆரூரன் உரைத்த உறுதமிழ்பத்தும்
[வல்லார் வினைபோய்
பாரும் விசும்புந்தொழப் பரமன்னடி கூடுவரே"

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் நின்றியூர்ப் பெருமானைத் தொழுவார் அடையும் பயன்களைக் கூறியுள்ளார். மேலும் சுந்தரர் தமது திருப்பதிகத்தில் நின்றியூர்ப்பரமனை வழிபட்டுப் பேறு பெற்றபலர் பற்றித் தெளிய விளக்கியுள்ளார். இந்திரன் வழிபாட்டை ஏற்று அவனுக்கு வானநாட்டையும் அகத்தியர்வழிபாட்டிற்கு மகிழ்ந்து அவற்குப் பொதியமலையில் இருக்கும் பேற்றையும் கதிரவன் எழுவதற்குமுன்னம் பால்சொரிந்தாட்டி வழிபாடியற்றிய பசுவிற்குத் திருவடிப் பேற்றையும், ஐராவதத்தின் வழிபாட்டிற்கு மகிழ்ந்து அதை விண்ணுலகு அடையச் செய்ததையும் விளக்கமாக அருளியுள்ளார்.

நாள் ஒன்றுக்கு ஒருவேலி நிலத்தின் வருவாயினுல் வழிபாடுகள் செய்யவேண்டும் என்ற குறிக்கோளில் மூந்நூற்றறுபது வேலி நிலத்தை அளித்து வழிபட்ட பரசுராமனுக்குத் திருவடிப் பேறளித்த செய்தியை, ஒரு பாடலில்,

"மொய்த்தசீர் முந்நூற்றறுபது வேலி
மூன்றுநூறு வேதியரொடு நுனக்கு
ஒத்தபொன் மணிக்கலசங்க ளேந்தி
ஒங்கு நின்றியூரென் றுனக்களிப்பப்
பத்தி செய்தவப் பரசுராமற்குப்
பாதங் காட்டிய நிதிகண்டடைந்தேன்
சித்தர் வானவர் தானவர் வணங்குஞ்
செல்வத் திருநின்றியூரானே"

என்று சுந்தரர் கூறியிருப்பது கண்டு மகிழலாம்.

தெய்வ வழிபாட்டில் ஈடுபடுபவர்களை இருதிறத்தவராகக் கொள்ளலாம் இயற்கையிலேயே தெய்வ வழிபாட்டில் அன்பு – பக்தியுடையவராய் வழிபடுவோர் ஒரு திறத்தவர். தனக்குவந்த அச்சம் – வறுமை – நோய் முதலியவற்றால் துன்பப்படுபவர்கள் அவை நீங்கப்பெறவேண்டும் என்ற பெருவேட்கை காரணமாக வழிபடுவோர் மற்றொருதிறத்தவராவர். பக்தி - அச்சம் இவற்றில் எதைப் பின்பற்றினாலும்சரி எப்படியாவது மக்கள் தெய்வ வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும் என்பதை தம் நெஞ்சிற்குக் கூறுவதுபோல் அறிவுறுத்துகிறார் அப்பர் சுவாமிகள்

" அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினை நின்றி யூரை நீ "

இப்பாடலால் வழிபாட்டின் இன்றியமையாமை புலப்படுத்தப் படுகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்த தலம் திருநாவலூர். திருவெண்ணெய்நல்லூர் சுந்தரரை இறைவன் வலிய ஆட்கொண்ட தலம். சுந்தரர் திருநாவலூர்ப் பெருமானைப் பாடும் பொழுது தம்மைத் திருவெண்ணெய்நல்லூர்ப் பெருமான் ஆட்கொண்டதை நினைவுறுத்திப் பாடுவதோடு அவ் இறைவனுக்கு இருப்பிடம் நம் திருநாவலூர் என்று எல்லாப் பாடல்களிலும் கூறுகின்றார். இதில் தாம் அவதரித்தத்தலம் என்பதைப் புலப்படுத்தி நம் திருநாவலூர் என்று உரிமைபாராட்டிக் கூறுதல் உணரத்தக்கது. இப்பதிகத்தின் இறுதிப்பாடலில் தோழமை உரிமை கொண்டு,

" நாதனுக் கூர் நமக்கூர் நரசிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக்காட் செயும்ஊர் அணிநாவலூர் "

என்று தம்மை ஆட்கொண்ட இறைவனுக்கும் நமக்கும் ஊர் நாவலூர் என்று தாம் அவதரித்த தலத்தில் உரிமைபாராட்டிக் கூறுவதைக் கண்டு மகிழலாம். இதைப்போலவே திருநின்றியூர்ப் பெருமானைப் பாடும் பொழுதும் "நம் திருநின்றியூர்" என்று 1, 2, 5, 8, ஆகிய நான்கு பாடல்களில் உரிமை பாராட்டிக் கூறுகிறார். இவ்வாறு நம் ஊர் என்று சுந்தரர் கூறும் தலமாக விளங்குவன திருநாவலூரும் திருநின்றியூரும் ஆகும்.

சண்டீசர், நாவுக்கரசர், கண்ணப்பர் ஆகிய நாயன்மார்களுக்கு அருள்செய்தபெருமான் என்று கூறும்பொழுது "ஏழெழுநூறிரும்பனுவல் ஈன்றவன் திருநாவுக்கரையன்" என்று திருநாவுக்கரசரைக் குறிப்பிடுதல் காணலாம். இதனால் நாலாயிரத்துத் தொள்ளாயிரம் பாடல்கள் நாவுக்கரசர் அருளினர் என்றும், ஆனால் அவை முழுதும் நமக்குக் கிடைக்கும் பேறு இல்லை என்றும் உணரலாம். இத்தகு சிறப்புமிக்க இத்தலத் திருக்கோயிலில் திருப்பணி செய்யவேண்டும் என்ற குறிப்போடு, தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 7-7-'75 திங்கட்கிழமை மாலை சுவாமிக்கும் அம்பாளுக்கும் லட்சார்ச்சனை செய்விக்கத் தொடங்கியருளியுள்ளார்கள்.

ஆடித்திங்கள் 30 ஆம் நாள் (15—8—75) கடைசி வெள்ளிக்கிழமையன்று லட்சார்ச்சனை நிறைவுபெறும். சுவாமிக்கும் அம்பாளுக்கும் நாள்தோறும் மாலையில் சகஸ்ரநாமார்ச்சனை நடைபெறும். இவ்வர்ச்சனையில் அனைவரும் பங்குகொள்வதற்கு வாய்ப்பாக அர்ச்சனை ஒன்றுக்கு ரூ. 7—50 வீதம் இரண்டு அர்ச்சனைகளுக்கு ரூ 15—00 கட்டணமாக அமைக்கப்பெற்றுள்ளது.

திருநின்றியூர் கிராம அன்பர்களும், வெளியூர் பக்தர்களும் இவ் அர்ச்சனையில் பங்குகொண்டு இறையருள் பெற்று உய்வார்களாக.

பணம் அனுப்பவேண்டிய முகவரி :

பொருளாளர்,

ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,

வைத்தீஸ்வரன்கோயில், மாயூரம் தாலுகா.

---

குறிப்பு :— இலட்சார்ச்சனையை முன்னிட்டு இங்கு நாள்தோறும் ஆதீனத் தேவார பாடசாலை ஆசிரியர் மாணவர்களால் திருமுறைப்பாராயணம் அபிராமி அந்தாதிப் பாராயணங்களும் தருமை ஆதீனப் புலவர்களால் சமய விரிவுரைகளும் நிகழ்த்தப்பெறும்.

## தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரியில்

# B. Lit தமிழ்க்கலைப்பட்ட வகுப்புத் தொடக்கம்

சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ்ப்புலவர் பட்டப் படிப்புக்கு (Title) ஈடாக, ஆங்கிலமொழிப் பாடங்களின்றி, தமிழ் மொழிப் பாடங்கள் மட்டும் படித்துப் பட்டம் பெறத்தக்க நிலையில் B. Lit என்னும் கலைப்பட்ட வகுப்பினை (Degree) தமிழ்க் கல்லூரிகளில் தொடங்க அனுமதி அளித்துள்ளது.

இப்பட்டப் படிப்பின் கால அளவு நான்கு ஆண்டுகளாகும். மெட்ரிகுலேஷன் அல்லது S. S. L. C. வகுப்புக்களில் தேர்ச்சிபெற்றோர் சேர்ந்து பயிலுதற்குரியர். ஒவ்வோர் ஆண்டிலும் - மார்ச், ஏப்ரலில், செப்டம்பர் அக்டோபரில் பல்கலைக்கழகத் தேர்வுகள் நடைபெறும்.

**தேர்வுகள் :**

முதலாண்டுத்தேர்வு எழுதியவர்கள் அனைவரும் வெற்றி தோல்வி பாராது முறையாக இரண்டாம் ஆண்டுப்பயிற்சிக்கு அனுமதிக்கப்பெறுவர். முதலாண்டு, மூன்றாமாண்டுகளுக்குரிய தாள்களில் சிலவற்றில் வெற்றி பெறாதவர்கள், இரண்டாம் ஆண்டிலோ, நான்காம் ஆண்டிலோ பயின்று கொண்டே, அந்தத் தாள்கள் மட்டும் செப்டம்பரில் எழுத அனுமதிக்கப்படுவர். இரண்டாம் ஆண்டில் நடத்தப்படும் தேர்வில், முதலாவது இரண்டாவது ஆண்டுகளுக்குரிய பாடங்கள் அனைத்திலும் தேர்ச்சிபெறவேண்டும். அங்ஙனம் தேர்ச்சி பெறாதவர் மூன்றாம் ஆண்டுப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படமாட்டார். மூன்றாமாண்டு பயில்வோர் வெற்றி தோல்வி பாராது நான்காமாண்டுப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர் நான்காமாண்டில் அனைத்துப்பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவரே வெற்றிபெற்றவராவார். ஒவ்வொரு தாளிலும் குறைந்த அளவு தேர்ச்சி மதிப்பெண் 35%. 60% க்குமேல் முதல்வகுப்பு. 50%க்குமேல் இரண்டாம் வகுப்பு.

புலவர் பட்டம் பெற்றோர் :

வித்துவான் அல்லது புலவர் தேர்ச்சி பெற்றவர்கள் (S. S. L. C. தேர்ச்சி பெற்றோர் மட்டும்) B. Lit. நான்காம் ஆண்டிற்குரிய 6 விருப்பப் பாடங்களில் எவையேனும் இரண்டு பாடங்களைத் தனிநிலையில் எழுதி தேர்ச்சி பெற்றால் இப்பட்டத்திற்கு ஏற்புடையராகலாம்.

பாடப்பகுதிகள்: இப் பட்டப்படிப்பின் பாடப் பகுதி முதன்மைப் பாடங்கள் துணைப்பாடங்கள் என இரு பிரிவுகளைக் கொண்டது.

முதல் ஆண்டு (1) இலக்கியம் I தற்கால இலக்கியங்கள்
(2) ,, II சிற்றிலக்கியங்கள்
(3) இலக்கணம் I
(4) தமிழகவரலாறு

இரண்டாம் ஆண்டு (1) இலக்கியம் III நீதிசமய நூல்கள்
(2) இலக்கணம் II
(3) ,, III
(4) விருப்பப்பாடம் I
(5) ,, II

மூன்றாம் ஆண்டு (1) இலக்கியம் IV காப்பியங்கள்
(2) ,, V சங்க இலக்கியம்
(3) இலக்கணம் IV
(4) கல்வெட்டுக்களும் கோயில் கட்டடக்கலையும்

நான்காம் ஆண்டு (1) இலக்கியம் VI சங்க இலக்கியம்
(2) இலக்கணம் V
(3) ,, VI தமிழ் மொழியின் வரலாறும் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணமும்
(4) விருப்பப்பாடம் III
(5) ,, IV

இரண்டாம் ஆண்டுக்குரிய விருப்பப்பாடங்கள்:

1. நாட்டுப்பாடல் இலக்கியம்
2. படைப்பிலக்கியம்
3. சைவம் அல்லது வைணவம்
4. சித்தர் முறைப்பாடல்கள்
5. தமிழகக்கலையும் பண்பாடும்
6. ஆங்கிலம் - தமிழ் மொழிபெயர்ப்பும் கட்டுரையும்

இவற்றுள் எவையேனும் இரண்டினைத் தேர்ந்து கொள்ளலாம்.

நான்காம் ஆண்டுக்குரிய விருப்பப்பாடங்கள்:

1. தமிழ் இலக்கிய வரலாறு
2. இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகள்
3. தொல் பொருள் ஆய்வு
4. தற்கால மொழி இயல்
5. கல்வெட்டுக்களில் பயிற்சி
6. அளவை இயல்

இவற்றுள் எவை யேனும் இரண்டினைத் தேர்ந்து கொள்ளலாம்.

இக்கல்லூரியில் இவ்வாண்டு பி. லிட் முதலாண்டு வகுப்பு தொடங்குகின்றோம். பி லிட் பட்டம் பெற விரும்பும் மாணவ மாணவியர் முதல்வர் அவர்களுக்கு ரூ. 3-25 பணவிடை (M.O) செய்து 10—7—75க்குள் விண்ணப்பம் பெற்றுப் பூர்த்தி செய்து அனுப்பலாம்.

---

தருமபுரம்,
10—7—75.

வி. சா. குருசாமி தேசிகர்,
முதல்வர்.

# திருநெல்வாயில் தலச் சிறப்பு

தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் தாலுகாவில் சிதம்பரம் புகைவண்டி நிலயத்திலிருந்து தென்கிழக்கில் ஒன்றரை மைல் தூரத்திலும், அண்ணாமலை நகருக்குத் தெற்கே ஒருமைல் தூரத் திலும் உள்ளது இத்தலம். நெல்வயல்களை ஊரின் வாயிலில் கொண்டு விளங்கும் மாட்சியால் இவ்வூர் நெல்வாயில் எனப் பெற்றது. இப்பொழுது இவ்வூர் சிவபுரி எனவழங்கப்பெறுகிறது. சுவாமியின் பெயர் ஸ்ரீ உச்சிநாதேசுவரர். அம்பிகை பெயர் ஸ்ரீ கனகாம்பிகை. சிவலிங்கமூர்த்தியின் பின்புறத்தில் பார்வதி பரமேசுவரர் திருஉருவங்கள் உள்ளன.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சீகாழியிலிருந்து சிதம்பரம் தரிசனம் செய்யும் பெருவேட்கையோடு திருநீலகண்ட யாழ்ப்பாணர், சிவபாதஇருதயர், அடியார்கள் புடைசூழப் புறப் பட்டுத் தில்லைவாழந்தணர்கள் வரவேற்கத் தில்லையை அடைந்து தென்திசைத்திருவாயில்வழியே திருக்கோயிலுக்குச் சென்று தில்லையம்பலவனைத் தரிசித்து மகிழ்ந்தார். சிதம்பரத் தலம் முழு துமே 'கோயில்' எனக் கூறப்படுவதால், 'தில்லையில் தங்க' அஞ்சித் திருவேட்களத்தில் தங்கியிருந்து தில்லைவந்து பலநாள் வழிபட்டு இன்புற்றார்.

திருவேட்களத்தில் ஞானசம்பந்தர் தங்கியிருந்தநாட்களில் திருக்கழிப்பாலை, திருநெல்வாயில் முதலான தலங்களுக்கும் சென்று வழிபட்டார்.

கைம்மான் மறியார் கழிப்பாலை உள்ளணைந்து
மெய்ம்மாலைச் சொற்பதிகம் பாடி விரைக்கொன்றைச்
செம்மாலை வேணித் திருவுச்சி மேவியுறை
அம்மானைக் கும்பிட்டு அருந்தமிழும் பாடினர்.

என்பது சேக்கிழார் திருமொழி.

இக்கோயிலில் மூன்றுகல்வெட்டுக்கள் படி எடுக்கப்பெற்றுள் ளன முத்து வேங்கடப்ப நாயக்கன் சகம் 1564ல் (கி. பி 1642) தூபாஷ் கிருஷ்ணப்ப நாயக்கன் நலத்திற்காகச் சிதம்பரம் அபிஷேகபுரம் அக்ரகாரத்திற்கு முத்து வேங்கடப்ப நாயக்கன் காரியஸ்தர் கோனேரி செட்டியார் இருபத்தைந்துமா நிலம் தந்தார் என்றசெய்தி கல்வெட்டில் காணப்படுகிறது

---

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நட்சத்திர நாளை 11—7—75 முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப் பெறுகிறது.

# உலகுரை பல்வகை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

## முன்னுரை :

நமது தமிழகத்தில் தோன்றியருளிய ஞானப் பெருஞ் சான்றோர்கள் பலருள், மணிவாசகப் பெருமான் தலைசிறந்த ஒருவர். அவர் அருளிச்செய்த திருவாசகம், தன்னிகரற்ற சிறந்த தொரு தெய்வீக ஞானப் பனுவல் ஆகும். அதன்கண் திருப் பெருந்துறையிற் குருவாக வந்து அருள்புரிந்த இறைவனைப் பிரிந்து சோகமேலீட்டினால் செய்வதறியாமல் திகைத்து மணி வாசகப் பெருமான் அழுது புலம்பியாற்றிய சதம் (நூறு) பாடல்கள் கொண்ட தொகுதியே திருச்சதகம்' என்று வழங்கப் படுகிறது "துக்கவுணர்வு நிறைந்த பாடல்களே சுவைமிக்க பாடல்கள்", "திகைப்புமிக்க பாடல்களே சிறந்த வளப்புமிக்க பாடல்கள்" தூய்மைமிக்க அழுகைப் பாடல்கள் சிலவே, இந் நாளில் அழியாமாட்சிமை அடைந்து திகழ்கின்றன.

> "The sweetest songs are those
> That tell of saddest thoughts"
>
> "The songs of despair are the loveliest songs
> And some, now immortal, the purest of sobs"
>
> — P. B. Shelley.

என்பர் அறிஞர். அவ்வுண்மைக்கு இனியதோர் எடுத்துக் காட்டாகச் சிறந்து திகழ்கின்றது 'திருச்சதகம்' எனலாம்.

---

சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் வாரந்தோறும் நடைபெற்றுவரும் திருவாசகவகுப்பில் அவ்வப்போது நிகழ்த்திய கருத்து விளக்கங்களின் தொகுப்புச் சுருக்கம்.

" சத்திய ஞானம்தரு தேசிகர் மோகம் சதகமாம் " என்பர் பெருங் கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் !

## திருச்சதகம் :

மணிவாசகப் பெருமானின் பல்வேறு வகையான மன வுணர்வு நிலைகளையும் பளிங்கென விளங்கக் காட்டும் பாங்கு உடையது திருச்சதகம்.

" உத்தமன் அத்தன் உடையான்
அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடும் மால்இவன்
என்ன, மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட,
ஊர்ஊர் திரிந்து, எவரும்
தத்தம் மனத்தன பேச,
எஞ்ஞான்று கொல் சாவதுவே "

என்னும் பாடல், திருவாசகத்தில் திருச்சதகம் என்னும் பகுதியில் வரும் ஓர் அரிய இனிய திருப்பாடல் ஆகும்.

## மணிவாசகரின் விருப்பம் :

இதன்கண் மணிவாசகர் சிவபெருமானை உத்தமன் – அத்தன் – உடையான் என்று சிறந்தெடுத்துப் புகழ்கின்றார். புகழ்ந்து, அத்தகைய சிவபெருமானின் திருவடிகளையே தம் முடைய மனம் நினையவும், நினைப்பதனால் உருகவும், அங்ஙனம் நினைந்து உருகுவதனால் மத்தம் ( மயக்கம், பித்து ) உறவும் வேண்டும் எனப் பெரிதும் விழைகின்றார். அம்மட்டோ ! தாம் சாகவேண்டும் என்றும் விரும்புகின்றார். சாதலாகிய பேறு தமக்கு என்றைக்கு வாய்க்குமோ ? என்று ஏங்குகின்றார். தாம் எங்ஙனம் சாதல்வேண்டும் என்றும் விவரிக்கின்றார். "மாலி இவன்" என உரைக்கவும். "மனநினைவில் ஒத்தன ஒத்தன" சொல்லிடவும், " எவரும் தத்தம் மனத்தன பேசவும் " தாம் சாகப் பெறுதல் வேண்டும் என மணிவாசகப்பெருமான், தணியா வேட்கை கொள்கின்றார். இவ்வுண்மை இப்பாடலால் செவ்விதிற் புலனாகின்றது. வாழ விரும்பாமல் சாக விரும்புகின்றாரே, ஏன் ? சாதல் என்றால் என்ன ? என்றெல்லாம் பலவகைகளில் நம்மைச் சிந்திக்க வைக்கின்றது இந்தத் திருப்பாடல்.

பாம்பன் சுவாமிகள் :

இந்நிலையில், இத்தகையதொரு மன நிலையுணர்வினை வெளியிட்டுள்ள மற்றொரு சிறந்த அருளாளர் ஒருவரின் நினைவு வருகின்றது. அவர்தாம் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள். அவர் அண்மைக்காலத்தில் வதிந்து மறைந்த ஓர் அருட்பெருஞ் சான்றோர் ஆவர்; தகராலய ரகசியம், பரிபூரணானந்தபோதம், திருப்பா, திருவலங்கல் திரட்டு, குமாரசுவாமியம் முதலிய பல அரும்பெரும் நூல்களை அவர் இயற்றியருளியுள்ளார். அவராற் பாடப்பெற்ற 'சண்முக கவசம்' முருகன் அடியார்களாற் பெரிதும் விரும்பிப் பாராயணம் செய்யப்பட்டுவருகின்றது.

இத்தகைய பல சிறப்புக்கள் மிக்க பாம்பன் சுவாமிகள் தமது நூல் ஒன்றில், 'நெஞ்சறிவுறூஉ' எனத் தம் மனத்தினை நோக்கி அறிவுரை கூறுவதாகப் பின்வரும் கருத்தமைத்துப் பாடுகின்றார்; சுவை மிகுந்த அப்பாடலின் பொருள் வருமாறு :-

நெஞ்சறிவுறூஉ :

(1) "ஒரு சில மக்கள், சிறந்த பெரியவர்களைக் கண்டால், அப்பெரியவர்கள் இல்லறத்தில் இருப்பின் நம்மைப்போல இவர்கள் இல்லறத்தில்தானே இருக்கின்றனர்? என்று கூறுவார்கள்; அப்பெரியவர்கள் துறவு நெறியில் இருந்தால், எதற்காகத் துறக்கவேண்டும்? இல்லறத்திலேயே இருத்தல் ஆகாதோ? என்பார்கள்.

(2) ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டால், ஞானிகளுக்கு ஆலய வழிபாடு எற்றுக்கு? மனம் தூய்மையாக இருந்தால், அதுவேபோதாதோ? என்பார்கள்; ஆலயங்களுக்குச்செல்லாமல் தனித்திருந்து தியான சமாதிகளில் ஈடுபட்டாலோ, ஆலய வழிபாடு செய்யாவிட்டாற் பயன் என்ன? என்பார்கள்.

(3) சடை வளர்த்திருத்தல் அல்லது மொட்டையடித்திருத்தல் இல்லாவிட்டால், தவவேடம் இல்லையே' என்பார்கள்; சடை வளர்த்தோ அன்றி மொட்டையடித்தோ இருந்தால், இவையெல்லாம் வீண் பெருமைக்கு; என்பார்கள்.

(4) ஓரிடத்தில் இருந்து தவஞ்செய்துவந்தால், பார்த்தீர்களா! இடப்பற்று விடவில்லை என்பார்கள்; பல இடங்களுக்குச் சென்று தீர்த்த யாத்திரை செய்து தரிசித்துவந்தால், பசுவைப் போல் அலைகின்றானே! ஓரிடத்தில் இருத்தல் ஆகாதா? என்பார்கள்.

(5) உண்டும் உடுத்தும் இருந்தால், நம்மைப்போன்றவர் தானே என்று நகையாடுவார்கள். உண்ணாமலும் உடுக்காமலும் இருந்தால், உண்டால் என்னே? உடுத்தால் என்னே? இவையெல்லாம் மூடத்தனம். அநாகரீகம் என்பார்கள்.

(6) சமய ஞான அனுபவக் கருத்துக்களை மக்களுக்கு விளக்குவதற்காகப் பேசினால், பேசா அநுபூதி பிறக்க வேண்டாவோ? பேசிப் பிதற்றிக்கொண்டிருப்பது எற்றுக்கு? என்று இகழ்வார்கள்; பேசாமல் இருந்தாலோ, இவரது தவத்தாலும் ஞானத்தாலும் உலகுக்கு என்ன பயன்? பேசினால் அன்றோ, உலகத்திற்கு உண்மை விளக்கமும் பயனும் உண்டாகும்? என்பார்கள்.

(7) கண் திறந்து பார்த்துவந்தால், இவருக்கு உள்முக நாட்டம் இல்லை; வெளிமுக நாட்டம்தான் என்பார்கள்; கண் மூடி இருந்தாலோ, எதற்காகக் கண்ணை மூடிக்கொண்டிருக்க வேண்டும்? இறைவன் படைத்த இயற்கைப் பொருள்களின் இனிய காட்சியினைக்கண்டு இன்புறுதல்கூடாதோ? என்பார்கள்.

(8) அற்புதங்கள் செய்யாது அடக்கமாக இருந்தால், இவருக்கு இறையருள் சிறிதும் கிட்டவில்லை என்பார்கள்; அற்புதங்கள் செய்து காட்டினாலோ, இவையெல்லாம் வித்தை – ஒருவகைச் சித்து – அவ்வளவுதான் என்பார்கள்.

(9) ஆதலால், நெஞ்சே! உலக மக்கள் பலவாறு தத்தம் மனப்போக்கிற்கேற்பப் பேசிக்கொள்ளும் பழித்துரை இழித்துரைகளுக்கு, நீ சிறிதும் கவலைகொள்ளாதே.

(10 இறைவன் அருளிய பலவகைச் சன்மார்க்க நெறிகளில், எதன்கண் உனக்குப் பிடித்தமும் பயிற்சியும் உள்ளதோ, அந்நெறியையே நன்கினிது கடைப்பிடித்து ஒழுகுக! இறைவனை வழிபட்டுச் சத்திய முத்தியை அடைக!

(தொடரும்)

# — இலங்கை —
# மாதோட்டத் திருக்கேதீச்சரம்

திருமுறைக் கலைஞர்

**வித்துவான். திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்**

( மலர் 34. இதழ் 7. பக்கம் 314 - இன் தொடர்ச்சி )

**மாதோட்டத் திருக்கேதீச்சரம் மண்மூடி அழிதல் :**

கி. பி. 1966 இல் பெரும் புயல் அடித்து மழைபெய்து திடீர் எனக் கடல் பொங்கி இராமேச்சுரத்தை அடுத்த தனுஷ்கோடிப் பகுதி யாவும் மூழ்கியதுபோல், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற இம்மூன்றுடன் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற பெரும் சிறப்பு வாய்ந்த மாதோட்டத் திருக்கேதீச்சரத்தின் ஒருபகுதியை, கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் இடையில் ( கி. பி. 1545 இல் ) திடீர் என்று கடல் கொந்தளித்துப் புயல்கொண்டு அழித்தது. சில பகுதியில் மக்கள் ஓடிவந்து வசித்தனர். சிவாலய பூசையும் ஒருவாறு செவ்வனே நடைபெற்றுவந்தது.

அதன்பின்னர் கி. பி. 1885 இல் போர்த்துக்கீசியர் பேராசையினாலும் மதவெறியினாலும் திருக்கேதீச்சர ஆலயத்துள் திடீர் என நுழைந்து ஏராளமான இரத்தினாபரணங்களையும், சேமிப்புப் பொருள்களையும், பட்டாடைகளையும், பிற பொருள்களையும் கொள்ளைகொண்டு, திருக்கோயில் மதில்கள், கோபுரங்கள் முதலியவற்றைப் பீரங்கிகொண்டு தாக்கி நாசம்செய்து, சுவாமிகளையும் உடைத்து எறிந்து யாவற்றையும் தரைமட்டமாக்கிச் சென்றனர்.

மக்கள் பலர் சிதறிஓடி வேறிடங்களுக்குச் சென்று குடியேறினர், சிலர் மதம்மாறினர். பீரங்கியினால் இடிக்கப்பெற்ற கோயில் கருங்கற்களை எல்லாம் போர்த்துக்கீசியர் எடுத்துச் சென்று மன்னார் துறை முகத்தைக் கட்டினர் என்பர். பின்பு சில ஆண்டு

களில் திருக்கேதீச்சரப்பகுதிகளில் மண்மாரி பெய்து மண்மூடிக் கிடாயது.*

மாதோட்டத் திருக்கேதீச்சரம் கி. பி. 16ஆம் நூற்றுண்டு இடையிறுதிக்குமேல் அழிவுற்றதிலிருந்து கி பி. 19-ஆம் நூற்றுண்டு இடைவரைச் சுமார் 300- ஆண்டுகள் வரை அதன் திருப்பெயரையே இலங்கைச் சைவ மக்களும் பிற மக்களும் கேளாது வாழ்ந்திருந்த இருள் செறிந்த காலம் என்றே சொல்லலாம்.

## நாவலர்பெருமான் நற்றொண்டு:

சைவசமயம் தமிழ்நாட்டிலும், ஈழநாட்டிலும், பிறநாட்டிலும் தழைத்தோங்கத் தோன்றிப் பெரும் சைவத்தொண்டுகள் பல புரிந்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்பெருமான் கி. பி. 1872 ஆங்கீரச ஆண்டு ஐப்பசித் திங்களில், இலங்கை மாதோட்டத்து ஒரு பகுதயில் " மறைந்து ஒரு மருந்து இருக்கிறது; ஒரு தேன் பொந்து இருக்கிறது; ஒரு திரவியம் இருக்கிறது '' என்று திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளிய திருக்கேதீச்சரநாதனை இலங்கைச் சைவ நன்மக்களுக்கு முதன்முதல் நினைவூட்டிப் பிரசாரம் செய்து அறிக்கை ஒன்று வெளியிட்டருளினார்கள். இவ்வாறு திருக்கேதீச்சரத்தலத்தை மக்களுக்கு நினைவூட்டிய பெருமை நாவலர்பெருமான் அவர்களுக்கே உரியதாகும்

மண்மூடி மேடிட்டு அழிந்து கிடந்த திருக்கேதீச்சரத் திருக்கோயிலின் நிலப்பகுதி சுமார் 40 ஏக்கர் வெற்று நிலத்தை விலைக்கு வாங்கிப் புதுக்கோயில் எடுப்பித்துப் பூசைகள் நடைபெற நாவலர்பெருமான் பெருமுயற்சி எடுத்தார்கள். அம்முயற்சி பயன் அளிக்கவில்லை.

நாவலர்பெருமானின் அறிக்கை வெளிவந்தபின் 21 வருஷம் கழித்துத் திருக்கேதீச்சரக்கோயில் மண்மூடிய 40 ஏக்கர் வெற்று

---

* மண்மூடி அழிந்த திருக்கேதீச்சரப் பகுதிகளில் கி பி. 1926 ஆம் ஆண்டிலும், கி. பி 1949 ஆம் ஆண்டிலும் அரசாங்க புதைபொருள் ஆராய்ச்சியாளர் பூமியைப் பறித்து ஆராய்ச்சி புரிந்தனர். சிற்சில இடங்களில் சிப்பிகள், சங்குகள், வளையங்கள் மண்பாண்டங்கள், பளிங்கு (கண்ணாடி)ப் பாண்டங்கள், சிறுவர் விளையாட்டுப் பொருள்களான பொம்மைகள் முதலியன மண்ணுள் புதைந்து கிடந்ததைக் கண்டுபிடித்துள்ளார்கள். இன்னும் ஆராய்ச்சியாளர் ஆராய்ச்சி செய்து கொண்டு வருவதாகக் கூறுகின்றனர்.

நிலம் கி. பி. 1893 டிசம்பர் 13 ஆம் தேதி அரசாங்கத்தார் யாழ்ப்பாணம் கச்சேரியில் ஏலவிற்பனை புரிவதாக விளம்பரம் செய்தனர். அதன்படி குறிப்பிட்ட காலத்தில் அரசாங்கத்தார் டி நிலத்தை ஏலம்விட, இலங்கைச்சைவ மக்கள் சார்பாக திரு. ராம. அரு. அரு. பழனியப்பச் செட்டியார் அவர்கள் தம்பேரில் 3100-00 ரூபாய்க்கு 13-12-1893 புதன்கிழமையன்று ஏலம் எடுத்தார்கள். இத்தொகையில் பெரும்பகுதி யாழ்ப்பாணத்துச் சைவ மக்கள் டி செட்டியார் அவர்களிடம்கொடுத்து உதவினர் என்பர்.

## மண் மூடிய திருக்கேதீச்சரத்தை மீட்டும் புதுப்பிக்கத் தொடங்கல் :

திருக்கேதீச்சர ஆலயத்தை ஏலம் எடுத்த பகுதியில் ஆராய்ந்து புதுப்பிக்க இலங்கைச் சைவ மக்களும் நகரத்தாரும் ஒன்று கூடிப் பேசி, சைவத்தொண்டரும், சைவசீலரும் ஆன வண்ணார்பண்ணை திரு. சி த மு. பசுபதிச் செட்டியார் அவர்களை முதன்மையாக நியமித்தார்கள். செட்டியார் அவர்கள் அத்தொண்டை அன்புடன் ஏற்றுப் பல தொழிலாளர்களைத் திருக்கேதீச்சரம் அழைத்துச்சென்று திருக்கோயில் இருந்த இடத்தைத் திட்டமாக அறிந்து கி. பி 1894 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலில் அங்குள்ள காடுகளை வெட்டி நிலத்தைப்பறித்துச் சோதனைபுரியும்போது 13—6—1894 புதன்கிழமை அன்று பழைய கோயிலின் அடிப்படையாவும் கண்டுபிடிக்கப்பெற்றன.

அப்போது பூமியிலிருந்து பெரிய சிவலிங்கம், நந்தி, விநாயகர், கற்சிலைகள், பூசைப்பாத்திரங்கள் பல, பலிபீடம் முதலியன எடுத்தனர். சிவலிங்கம் எடுக்கும்போது கவனக் குறைவால் சிறிது பழுதுபட நேர்ந்தது. பழைய கிணறு ஒன்றையும் கண்டுபிடித்தனர்.

## ஆலயம் புதுப்பித்தலும் குடமுழுக்கு விழாவும் :

அதன்பின்னர் திரு. சி. த மு பசுபதிச் செட்டியார் அவர்கள் பெருமுயற்சிகொண்டு இலங்கைச் சைவமக்கள்மூலம் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிபுரிய ரூபாய் 22000—00 க்குமேல் திரட்டினார்கள். முன்னர் சுவாமி அம்மன் திருக்கோயில்கள், திருமடைப்பள்ளி முதலியன கட்டினார்கள். ஈழத்துச் சைவ மக்களின் விருப்பத்திற்கு இணங்க, காசியிலிருந்து சிவலிங்கம் ஒன்றும், தமிழ்நாட்டிலிருந்து கௌரி அம்மையார் திருவுருவம் ஒன்றும் கொண்டுவந்து முன்னைய மூலஸ்தானம் இருந்த இடத்தில் கிழக்குநோக்கிய சந்நிதியாக சிவலிங்கத்தையும், அதன் எதிர் பூமியில்கிடைத்த நந்தி பலிபீடத்தையும், சுவாமிக்கு

வடபாகமாகத்தெற்குநோக்கியசந்நிதியாகக்கௌரியம்மையையும் பிரதிஷ்டைசெய்து, சோபகிருது ஆண்டு ஆனித்திங்கள் 14 ஆம் நாள் ( 28—6—1903 ) ஞாயிற்றுக்கிழமை வளர்பிறை சதுர்த்தசி நன்னாளில் பெருஞ்சாந்தியாகிய மகாகும்பாபிஷேகம் சிறப்புறச் செய்துவைத்தார். அதன்பிறகு திருக்கேதீச்சரம் மிகப் பிரசித்தியாக விளங்கியது. பற்பல இடங்களிலிருந்து அன்பர்கள் வந்து தரிசித்து மகிழ்ந்தனர் விசேடகாலங்களில் சிறப்புறப் பூசையும், விழாவும் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. இரண்டுகால பூசைகள் நடைபெற்றன.

## திருக்கோயில் நிர்வாகம் – நகரத்துச் செட்டியார்கள் :

திருக்கோயிலில் நித்திய நைமித்தியம் முதலிய நிர்வாகப் பொறுப்பு 28—6—1903 முதல் இலங்கை மாதம் பை நகரத்துச் செட்டிமார்கள் இடமும், அதன்பிறகு 1—3—1919 முதல் யாழ்ப்பாணம், கொழும்பு இவற்றில் இருந்து வரும் நகரத்துச் செட்டியார்கள் இடமும். பிறகு காலப்போக்கில் கொழும்பு – பழைய, புதிய கதிரேசன்கோயில் நிர்வாகஸ்தர்களான நகரத்துச் செட்டியார்களிடமும் இருந்து செவ்விய முறையில் யாவும் குறைவுபடாமல் நடைபெற்றுவந்தன.

## கொழும்பு திருப்பணிச் சபையார் தொண்டு :

பல ஆண்டுகள் சென்றன, திருக்கேதீச்சரத் திருக்கோயில் காலப்போக்கில் திருப்பணி எதுவும் இன்றிச் சிதைந்துவரலாயிற்று. அதனை அறிந்த கொழும்பு – இந்து மக்கள் – சைவ மக்கள் திருக்கேதீச்சர ஆலயத்தைப் புதுப்பிக்க எண்ணி அங்கு 19—10—1948 இல் ' திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபையார் ' என்ற ஒரு சபை நிறுவினர். பின்பு பெரும் பொருள் திரட்டினர்; திருக்கேதீச்சர ஆலயத்தில் சிதைந்த பகுதிகளையெல்லாம் முன்னர் திருப்பணிசெய்தனர்; வெள்ளையடித்து ஆலயத்தை அழகாகப் புதுப்பித்தனர். கி. பி 1952 – ஆகஸ்டு மாதத்தில் மகாகும்பாபிஷேகம் ஒன்றும் செய்வித்தனர்.

## திருப்பணிச் சபையார் நிர்வாகத்தை ஏற்று நடத்தல் :

திருப்பணிச் சபையார் மேலும் தொடர்ந்து பொருள்திரட்டித் திருப்பணியைச் செய்துவரலானார்கள். திருக்கோயில் நிர்வாகத்தை கி. பி. 1952 க்குமேல் கொழும்பு-பழைய, புதிய கதிரேசன் கோயில்களின் அவ்வப்போதைய அறங்காவலர்கள் இருவருடன் திருப்பணிச் சபையார் நியமித்த பஞ்சாயத்தார்களும் இருந்து தற்போது செம்மையாக நடத்திவருகின்றனர்.

முன்னர் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஆதியில் திருக் கோயிலுக்கு வாங்கி வைத்துள்ள நன்செய் நிலம் 80 ஏக்கரின் நெல் வருவாய், ரொக்க வருவாய் முதலியவற்றைக்கொண்டு நித்திய பூசையாதிகள் நடைபெற்று வருகின்றன.

திருப்பணிச்சபையார், திருக்கேதீச்சர ஆலய திருப்பணியில் பேருக்கத்துடன் இருந்து கிழக்குப் பகுதியில் ஐந்து நிலைகளை யுடைய இராசகோபுரம், அதனை ஒட்டி நான்குபுறமும் சுற்றுமதில் களை முடித்து மேலும் ஆலயத்துள் கல்லால் கர்ப்பக்கிரகம், ஸ்தூபி, அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், சுற்றுப்பிராகாரம், பத்திமண்டபம் முதலிய பற்பலத் திருப்பணி களைச் செய்துகொண்டு வருகின்றனர். பெரிய வெங்கலமணி (இலண்டன் தொழிற்சாலையில் வார்க்கப்பெற்றது) ஒன்று இராசகோபுரத்து இடப்பக்க வெளியில் மணிமண்டபம் கட்டி அமைத்துள்ளனர். அம்மணியின் ஓசை வெகுதூரம் கேட்கிறது.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. மக்கள் ஆலய குடமுழுக்கு விழா நடைபெறும் காலத்தை ஆவலுடன் எதிர்நோக்கிநிற்கின்றனர்.

## தற்போதைய திருக்கேதீச்சர ஊர் நிலைமை :

திருக்கேதீச்சர ஆலயம் நடுவிருக்க அதனைச்சுற்றி நான்கு மாடவீதிகளும், அவற்றில் பற்பல திருமடங்களும், வடபக்கம் நந்தவனமும், கோயில் தொழிலாளர் வீடுகள், பிறர் வீடுகள் முதலியனவும், கீழ்ப்பகுதியில் சிறு சிறு கடைகளும் உள்ளன. மாடவீதியை அடுத்துக் கீழ்ப்பகுதிகளில் ஆரம்பப் பாடசாலை, நெசவுச்சாலை கூட்டுறவுப்பண்டகச்சாலை, தேனீர்உணவுச்சாலை முதலியன சிறப்புற உள்ளன. ஊர்க்கு நன்னீர்க்குழாய், திருக் கோயிலுக்கும் சிற்சில மடங்களுக்கும் மின்சார விளக்குகளை அமைத்துள்ளனர்.

மக்கள் வசதிக்கு அங்குத் தபால் நிலையம், தந்தி நிலையம், தொலைபேசிநிலையம், காவல்நிலையம் முதலியவற்றை ஆரசாங்கத் தார் அமைத்துள்ளனர். போக்குவரத்து வசதிகளும் உள்ளன.

திருக்கேதீச்சரமும், அதன் தென்பால், கீழ்பால் சூழ்ந்து விளங்கும் கிராமங்களும் சேர்ந்து மன்னார் அரசாங்கத்தைச் சேர்ந்தவை. இக்கிராமங்கள் யாவற்றையும் தற்போது மாந்தை எனக் கூறுகின்றனர். மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம், திருக் கோணமலை, கண்டி, அநுராதபுரம், கொழும்பு, கதிர்காமம் முதலிய பற்பல இடங்களுக்குச் சென்றுவர உந்துவண்டிகள், புகைவண்டிகள் முதலிய வசதிகள் மிகுதியாக உள்ளன.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்கு

ஆசியக் கவிஞர்கள் வந்தபோது

ஆதீனச் சார்பில் அளிக்கப்பெற்ற

# வரவேற்புக் கவிதை*

25—6—1975

உலகம்ஓர் பெருங்குடும்பம்; மக்கள் எல்லாம்
ஒருங்கிணைந்த சோதரர்கள்; உளத்தே பூத்த
அலகில்லாக் கற்பனையில் உணர்வைப் பூசி
ஆக்குகின்ற கவிதைகளால் ஆள்வோம் என்ற
விலக்கரிய புகழ்பூத்த கவிதை நல்கும்;
வீறுடைய ஆசியத்தின் உயிர்த்துடிப்பை
மலர்த்துகின்ற கவிஞர்களே! மாட்சி மிக்கீர்
மனமுவந்து வரவேற்றோம் வருக! வாழ்க! (1)

பேசும்மொழி; பண்பாடு கலைகள்; வாழ்க்கை;
பெருஞ்சமயம்; விஞ்ஞானம்; தொன்மை மற்றும்
விசுபுகழ் நுண்ணறிவால் நூறு கோட்டில்
வேறுபட்டீர் என்றாலும் கவிதை என்னும்
ஆசில்லா நேர்க்கோட்டில் இணைந்த உங்கள்
அரும்பண்பைப் பாராட்டி வாழ்த்துக் கூறி
பேசரிய புகழ்பூத்த தருமை என்னும்
பீடுடைய ஆதீனம் விருந்தாய் ஏற்கும். (2)

---

* கவிதை இயற்றியவர்:- தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர், வித்துவான் திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள்.

விண்பூத்த மீன்களெல்லாம் இறங்கி வந்தோர்
　　வீட்டுக்குள் இணைந்ததைப்போல் ஆசியத்தின்
பண்பாட்டுத் தூதர்களே ! கவிதை என்னும்
　　பாசத்தால் உலகிணைக்கும் பாங்குள் ளீரே !
மண்விட்டு விண்படர்ந்த புகழால் ஓங்கி,
　　மாட்சிமையால் சிறக்கின்ற தருமை என்னும்
தண்பூத்த திருமண்ணில் இணைந்துள் ளீர்கள் ;
　　தக்கோரே அறிமுகமாய்ச் சிலசொல் கின்றோம் ! (3)

கீழ்த்திசை நாடுகளும் ; அவற்றுள் எல்லாம்
　　கீர்த்திமிகு பாரதமும் ; அதனுள் ஓங்கும்
தாழ்ந்திரத்தல் அறியாத தமிழர் நாடும் ;
　　தனியரசு ஓச்சுகின்ற தமிழின் பீடும் ;
வீழ்ந்திறத்தல் இல்லாது நாளும் ஓங்கும்
　　வெற்றிமிகு சைவநெறிப் பாங்கும் ; மற்றும்
ஆழ்திறத்து நுண்கலைகள் பலவும் கண்ட
　　அன்புடையீர் ! தருமைக்கு அணிதிரண்டீர் ! (4)

கூடியுள்ள திருமண்ணின் வரலாறாகக்
　　கூறுதற்கு ஒருநூறு செய்தி உண்டு
ஆடிவரும் காவேரி நதியின் ஓரம்
　　அமைந்திருக்கும் தருமையது புகழை எல்லாம்
நாடிவந்த உங்களிடம் விளக்கிச் சொன்னால்
　　நாளிலமே அறியுமென்ற உணர்வால் நெஞ்சில்
கூடிவரும் பெருமிதத்தால் ; ஒன்றிரண்டு
　　கூறுகிறோம் ; நெஞ்சத்தில் கூட்டிக் கொள்ள, (5)

புத்தமுதக் கனிபடைப்பீர் ; நானூறாண்டுப்
　　புகழ்பூத்த வரலாற்றில் கவிதைக்காக
எத்திக்கும் புகழ்விளக்கும் தருமை, நாட்டில்
　　ஏற்றிவைத்த தீபங்கள் கோடி ! கோடி !
தித்திக்கும் கவிதைகளைத் தீட்டுகின்ற
　　திறன்படைத்தோர் பலர் இந்த ஆதீனத்தின்
வித்தகராய் விளங்கியதும், கவிதைப் பூங்கா
　　வேர்விட்டுத் தழைத்ததுவும் இம்மண் ணில்தான் ! (6)

கயிலாயத் திருமரபில் தொடங்கி, ஞானக்
கதிர்வீசும் விரிசுடராய் நானூ றாண்டு
குயில்கூவும் சோலைநிறை தருமை என்னும்
கூடுபுகழ் ஆதீனம் வளர்ந்து, ஓங்கும்
பயில்வாய்மைப் பெரும்புகழும் அற்பு தங்கள்
பன்னூறு விளைந்ததுவும் திகழும் சைவ
மயில் எழுந்து ஆடியதும் ; தமிழ் வளர்ச்சி
மாட்சிமையைப் பெற்றதுவும் வரலா றாகும் ! (7)

குருஞான சம்பந்தர் என்னும் மேன்மைக்
குணத்தாரின் அருள்நெஞ்ச விளக்கத் தாலே
திருஞான மரபுநெறி துலக்கும் இந்தத்
தெய்வீக ஆதீனம் தோற்றம் கொண்ட
வருஞானம் உலகுக்கு வழங்கி, எட்டு
வளப்பான சாத்திரங்கள் அருளிச் செய்து,
பெருஞான பானுவென உலகங் காத்த
பீடுடையார் திருவடிகள் உலகம் போற்றும். (8)

அற்புதங்கள் ஒன்றிரண்டோ ? கைவி ளக்கை
ஆசிரியர்க் காய்ஏந்தி நின்ற காலை
பொற்புடைய மழைநீரும் புனிதர் தம்மைப்
போற்றியதை வியப்போமா ? நீர்த்து றையில்
சிற்றறிவுப் புல்வாயும் புலியும் ஒன்றாய்
சேர்ந்துநீர் பருகியதைப் போற்று வோமா ?
அற்புதத்து நடம்பயிலும் இறைவன் தேவி
ஆரமுது ஊட்டியதை விவரிப் போமா ? (9)

பக்குவத்தில் உயிரோடு நிலவ றைக்குள்
பயில் ஜீவ சமாதிநிலை கூடிப் பின்னை
தக்கதொரு தருணத்தில் அடியார் வேண்டத்
தாமெழுந்து முறைசெய்து மீண்ட செய்கை
எத்தகைய தென்பதனை, கிறித்து வத்தின்
ஏசுபிரான் செயலோடு ஒப்புச் சொல்வர் ;
அத்தகையார் அடிச்சுவட்டில் இருபத் தைந்து
அருளாளர் கோலோச்சி அணிசெய் திட்டார் ! (10)

அளப்பரிய பக்குவத்தால் இறைவன் தாள்கள்
அடைந்தார்கள் ; பிழைசெய்த மன்னன் கண்கள்
உளமாரத் திறப்பதற்கு அருளி னார்கள் ;
உயர்வான மழைபெய்யச் செய்வித் தார்கள் ;
களங்கங்கள் துடைப்பித்துப் பிள்ளைப் பேறு
கருணையினால் பெறுதற்கு வழிசெய் தார்கள்
விளங்காத நுட்பங்கள் விளக்கிச் சைவம்
வேர்விட்டுப் படர்தற்குச் செய்திட் டார்கள் ! (11)

காசிவரை பிரயாணம் செய்து இந்திக்
கனிமொழியைக் கற்றிட்டு, வாதில் வென்று,
ஆசுபுகழ்க் கவிசெய்த பெருமை மிக்க
அளப்பரிய புகழ்க்குமர குருப ரர்க்குத்
தேசுபுகழ்த் தெளிஞானக் கொடை வழங்கித்
திக்கெட்டும் வலம்பெறவே செய்தா ரெல்லாம்
மாசில்லாத் திருமரபில் வந்து தித்த
மாணிக்கக் குருமணிகள் வாழ்வில் உண்டு ! (12)

பண்டார சந்நிதிகள் என்னும் இந்தப்
பண்பாளர் கவிதைகளை உலகத் தார்கள்
கொண்டாடி மகிழ்கின்றார் ; தருமை தந்த
குளிர்ஞான அடியார்கள் மொழியில் மேன்மை
விண்டோடி விளங்குதற்குப் படைத்துத் தந்த
வீறுடைய நூல்கள்பல இங்கே உண்டு
பண்டோடிப் பார்வாழ மொழியின் நுட்பம்
படைத்தார்கள் ; காத்தார்கள் ; வாழ்வித் தார்கள் ; (13)

ஆண்டவனின் திருக்கோயில் பலவும் இந்த
ஆதீனக் காப்பிற்குள் சான்றோர் தம்மால்
வேண்டிவிடப் பட்டதென்றால் கோயில் காவல்
வித்தகத்தை உரைப்பதற்கு வேறென் வேண்டும் ?
காண்டகுநல் திருக்கோயில் இருபத் தேழு
கவின்மிக்க ஆதீனப் பாது காப்பில்
மாண்டுயர்ந்து வருவதனை உலகம் போற்றும்
மாநிலத்தார் வியப்பார்கள் ; தூய்மை கண்டு ! (14)

திருக்கோயில் பேணுவதும் ; அடியார் தம்மைத்
திருமரபு நெறிவாழச் செலுத்தும் பாங்கும் ;
உருவார அணிகின்ற திருநீ றெங்கும்
உவந்தேற்கச் செய்வதுவும் ; தலங்கள் தோறும்
பெரிதான யாத்திரைகள் கொண்டு மக்கள்
பீடுடைய சைவத்தில் இணைதல் செய்தும் ;
வருகின்ற குருமணிகள் வரலா றெல்லாம்
வளர்சைவ வரலாற்றின் அங்கம் ஆகும். (15)

இருபத்தைந்தாம் நல்ல பட்டம் தன்னில்
இணையின்றி விளங்கிட்ட குருவின் ஆட்சி
வருஞான நிலைஓங்க வகைமை செய்த
வரலாறு பெரிதாகும் ; கயிலை கண்டு
பெருஞானம் பெற்றிந்த ஆதீனத்தின்
பீடுடைய வரலாற்றில் பெருமை சேர்த்தார் ;
தருஞான வளம்பலவும் இணைத்த தெல்லாம்
தனியுரைக்க இடமில்லை — தண்ணார் ஆட்சி ! (16)

அறச்சொத்துப் பேணுவதும் கோயில் தம்மை
அறங்காவல் செய்வதுவும் பழைய நூல்கள்
மறக்காமல் அச்சேற்றி மணக்கச் செய்தும் ;
மறைநூல்கள், திருமுறைகள்; உரைகள் கண்டும்
அறவழிநூல் ஆகமங்கள் விதியில் பூசை
ஆக்குதற்கு இளைஞர்களைப் பயிற்றுவித்தும்
திறமான தேவாரப் பனுவல் ஓத
சிறப்பான பள்ளிகளும், தமிழைக் கற்க (17)

தக்கதொரு கல்லூரி நிறுவி அங்கே
தரமான சாத்திரத்தை விளங்கச் செய்தும்,
எத்தருணமானாலும் துயர் துடைக்க
எண்ணரிய தொகை வழங்கிக் காப்பதுவும்,
புத்தமுதக் கல்விக்கும் — வறுமை நோய்க்கும்,
புதியநலத் திட்டங்கள் தீட்டித் தீட்டி
அத்தனைக்கும் உதவுவதும் ஆதீனத்தின்
அன்றாடப் பணிகளிலே சிலவே யாகும். (18)

அறியாமை துடைக்க இருபள்ளி ; மற்றும்
ஆன்மீக நெறிவளர்க்கத் திங்கள் ஏடு,
பெரு ஞான சம்பந்தம் எங்கும் கோயில்
பெரிதான திருப்ப ணிக்கு நிதியுதவி
திருமரபு நெறிகாக்க அன்பர்க் கெல்லாம்
நியமங்கள் போதிப்பு ; இவைகள் எல்லாம்
பெரிதான சிவவளர்ச்சிப் பணிகள் ; மற்றும்
பிழையில்லா உயிர்காக்கும் கடமை இங்கே ! (19)

தித்திக்கும் செந்தமிழும், சைவம் என்னும்
திருமரபும் காக்கின்ற ஆதீ னத்தை
எத்திக்கும் புகழ்பூக்க ஆட்சி செய்யும்
எழிலார்ந்த இருபத்து ஆறும் ஞான
வித்துக்குள் விளைவான குருவே எங்கள்
விளங்குபுகழ் சண்முக தேசிக ஞான
முத்தி நலச் சம்பந்த பரமா சார்ய
முழுநலத்துக் குண ஞான வள்ள லாவார். (20)

செந்தமிழில் பெரும்புலமை; சைவச் சீர்த்திமிகு
சாத்திரத்தில் ஈடுபாடு; சமய வாழ்க்கை
எந்தநிலை இயங்கிடுதல் வேண்டும் என்ற
எண்ணத்தை வாழ்வியலில் காட்டும் பாங்கு!
அந்தமிலாப் பெருமை தரும் ஒழுக்கம் ஒன்றே
அடிப்படையென் றறிவிக்கும் பெருமி தங்கள்;
சிந்தைஎலாம் சிவஞானம்; கருணை பூத்த
சீரருளின் இணைவிழிகள்; செம்மை வாழ்வு; (21)

ஆழ்புலமை வேண்டுமென்ற நெஞ்சம்; மக்கள்
அனைவருமே உழைக்கத்தான் வேண்டும் என்ற
தாழ்மையிலாச் சமுதாயம் காணும் ஊக்கம்;
தனித்தன்மை உடையவராய் மக்கள் ஓங்கி
வாழ்ந்திடுதல் வேண்டுமென்ற எழுச்சி உள்ளம்;
வரலாற்று நெறிபோற்றி உலகம் எல்லாம்
கீழ்மையிலா தோங்கிடவே வேண்டும் என்ற
கீர்த்திமிகு உளப்பாங்கு; கிளர்ந்த எண்ணம்; (22)

சான்றோரைப் பாராட்டும் நெஞ்சம்; தக்க
சன்மானம் அளிக்கின்ற கொடைப் பெருக்கம்;
வான்தோய்ந்த புகழ்க்குணங்கள்; நுணுக்க மான
வரம்புகளை இலக்கியத்தில் காணும் ஆழம்;
தேன்மொழிகள் ஒருங்கிணைந்த இருபத் தாறும்
திருவாளர் அருளாட்சிக் காலந் தன்னில்
வான்புகழை ஆதீனம் எய்தி ஓங்கும்;
வரலாறு பின்எழுதும் வானும் போற்றும். (23)

ஒப்பற்ற குருமணிகள் அருளின் ஆசி
உயர்ந்தோங்க நல்வாழ்த்து நூறு கூறி,
செப்பரிய கவிஞர்களே! சிறப்பின் மிக்கீர்;
உங்களை இவ் வாதீனம் வரவு கூறும்;
தப்பில்லாச் சமுதாயம் உழைப்பால் ஓங்க
தளராது தொண்டாற்ற சமய வாழ்வால்
எப்பாரும் ஒன்றுபட உழைப்பீர் என்ற
எண்ணத்தை முன்வைத்து வரவேற் கின்றோம். (24)

எங்களது நிலைசொன்னோம் ; மொழியும் நாடும்
இன்புவுடைய கலைக்கூறும் உடையீர் ! உங்கள்
பங்கமிலா அறிமுகத்தை, பண்பை, மக்கள்
பழக்கத்தை அறிவித்தால் கேட்போம் ! நெஞ்சம்
பொங்கிவிடப் புதுத்தெம்பைப் பெற்றோம் என்ற
பெருமிதத்தில் நின்றூர்ப்போம் ; ஆத லாலே
உங்களது நிலைமைகளை உரைக்க வேண்டி
உள்ளன்பால் வரவேற்றோம் வருக ; வாழ்க ! (25)

பன்னாட்டுக் கவிஞர்களை அழைத்து வந்து
பண்பாட்டுப் பரிமாற்றம் செய்வித் தோர்க்கும்,
இன்னாட்டுக் கவித்துவத்தை அறியும் போக்கில்
எங்களது ஆதீனம் காணல் வேண்டி
அன்போடு இவண்போந்த கவிஞர் கட்கும்,
அங்கயற்கண் அம்மை இடப் பாகங் கொண்ட
இன்ஆல வாய்ப்பெருமான் அருளும், தருமை
எழிற்குருவின் ஆசிகளும் இணைக! வாழ்க! (26)

# நந்திக் கதம்பம். 5.

"நஜன்"

(மலர் 34, இதழ் 6, பக்கம் 264 இன் தொடர்ச்சி)

**நந்திதேவரும் பிரதோஷமும் :**

சிவாலயங்களில் ஒவ்வொரு பிரதோஷத்தின் போதும் நந்தி தேவருக்கு அபிஷேகம் செய்து உடையுடுத்தி அருகம்புல் மாலை அணிவிக்கப் பட்டிருப்பதைப் பார்க்கலாம். நந்திதேவருக்கும் பிரதோஷத்திற்குமுள்ள தொடர்பு அவசியம் அறிய வேண்டிய தொன்று.

சிவதரிசனத்திற்கு ஏற்ற காலம் பிரதோஷம். திரயோதசி ஏற்பட்ட காலத்தைப் பிரதோஷம் என்பர். மாசிமாதம் வரும் திரயோதசி மகாசிவராத்திரி. பகல்இரவு சந்திக்கும் நேரத்தில் இயற்கையில் ஒரு வித மின்சார சக்தி உலகெங்கும் பரவுகிறது.

நம் தேகத்திலும் ஒடுக்கத்தால் மின்சாரம் பாய்கிறது. இந்த சமயத்தில் நம் உடம்பிலுள்ள குண்டலி சக்தி எழ சாதகமான சூழ்நிலை. சிவபெருமான் நடனமாட இந்த சமயத்தையே தேர்ந் தெடுத்திருக்கிறுர்.

இடகலைவழியாகக் காற்றைத் தூக்கி (இடது காலைத் தூக்கி) சூரிய நாடியில் மூச்சு சஞ்சரித்தால் பரப்பிரும்ம நிலையை எய்தலாம் என்பதை உணர்த்தினர் நம் யோகிகள். யோகி களுக்கெல்லாம் யோகியாக (ஸம்யமி) சிவபெருமான்விளங்குகிறுர்

பாற்கடல் கடையப்பட்டபோது முதலில் வெளிப்பட்டது ஆலகாலவிஷம். அதைச்சிவபெருமான் அருந்தி எல்லோரையும் காப்பாற்றினுர்; இது நடந்தது கார்த்திகை சனிக்கிழமை பிர தோஷ காலத்தில் எனக் கூறப்படுகிறது.

ஆலகால விஷத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள் சிவபெருமானிடம் சென்று இடமாகவும் வலமாகவும் இடவலமாகவும் ஓடி ரிஷபதேவரின் அண்டத்தில் ஒளிந்து கொண்டனர். சிவ பெருமான் ரிஷபதேவரின் கொம்பின் நடுவில் தோன்றி நடனமாடினார். இவ்வரலாறு கடம்பவன புராணம் என்ற மதுரைத் தல புராணத்தில் கூறப்பட்டுள்ளது. ஆந்திர தேசத்தின் நஞ்சுண்ட சிவக்ஷேத்திர புராணத்தில் வைகாசமாதனிப்பிர தோஷத்தில் சிவபெருமான் நஞ்சுண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

## சோம சூத்திரப் பிரதக்ஷிணம் :

இப்பிரதோஷ காலத்தில் இப்பிரதக்ஷிணம் செய்வது மிக விசேஷமானது. இது தேவர்கள் பயந்து ஓடி ஒளிந்ததை ஞாபகப்படுத்துவதாக உள்ளது. முதலில் ரிடப தேவரைத் தரிசித்து, அங்கிருந்து அப்பிரதக்ஷிணமாகசண்டிகேசுவரர்வரை சென்று அங்கிருந்து திரும்பி பிரதக்ஷிணமாகப் போகும் வழியில் நந்திதேவரைத்தரிசித்துவிட்டு கோமுகியை அடையவேண்டும். மீண்டும் கோமுகியிலிருந்து புறப்பட்டு அப்பிரதக்ஷிணமாகப் போகும் வழியில் நந்தியைத் தரிசித்துவிட்டு சண்டேசுவரரை அடையவேண்டும். திரும்பவும் சண்டேசுவரரிடமிருந்து பிரதக்ஷிணமாகப் புறப்பட்டு நந்தியைத் தரிசிக்காமல் சென்று கோமுகியை அடைந்து அங்கிருந்து அப்பிரதக்ஷிணமாக நந்தியைத் தரிசிக்காமல் வந்து சண்டேசுவரரை யடைய வேண்டும். இறுதியில் பிரதக்ஷிணமாக ரிடப தேவரிடம் வந்து பின் சிவபெருமானைத் தரிசிக்கவேண்டும். இவ்வாறு சோம சூத்திரப் பிரதக்ஷிணம் செய்தால் அனந்தமான பலன் உண்டு என்று கூறப்படுகிறது.

" விருஷபம் பூஜயேத் பூர்வம் பஸ்சாத்சிவம் மதார்ச்சயேத் "

என்று காரணாகமத்தில் கூறப்பட்டிருப்பதால் முதலில் ரிஷப தேவருக்குப் பூஜைசெய்து விட்டு பிறகுதான் பூஜை செய்ய வேண்டும்.

" விருஷஸ்ய வ்ருஷணே சைவ
சர்வதீர்த்தாநி சந்திவை
ததத் வ்ருக்ஷணம் ஸ்பிருஷ் ட்வா தஸ்மாத்
சிருங்க மத்யே சிவம் த்ருசேத் "

சர்வ தீர்த்தங்களும் அடங்கிய ரிஷபத்தின் அண்டத்தைத் தொட்டுக்கொண்டு இரண்டு கொம்புகளின் நடுவே சிவபெருமானைத் தரிசித்தால் கடன், வறுமை, நோய், கிலேசம், மனவேதனை இவை நீங்கப்பெறும்.

பல தலங்களில் சில குறிப்பிட்ட நாட்களில் சூரிய கிரணம் காலையிலோ மாலையிலோ சிவலிங்கம்மீது விழும்படி கோவில் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளில் சேலம் மாவட்டத்திலுள்ள தாரமங்கலம் ஊரில் மட்டும் பிரதோஷ காலத்தில் மாசி மாதம் 9, 10, 11 தேதிகளில் மாலை 6-மணி அளவில் சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் சூரிய கிரணம் வாயில்களைக்கடந்து சந்நிதியிலுள்ள நந்திகளின் கொம்புகளின் இடைவழியே சென்று இறைவன் மீது படுகிறது. இந்த ஒரு தலத்தில் மட்டும்தான் நந்தியின் கொம்புகளின் வழியே சூரிய கிரணம் செல்கிறது இனி பல்வேறு ஆலயங்களிலுள்ள நந்திதேவரைத் தரிசிப்போம்

(தொடரும்)


உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்.

இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

நிகழும் இராட்சசஆண்டு ஆடித்திங்கள் 23 ஆம் நாள் (8—8—75) வெள்ளிக்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தன்று சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள திருக்கழிப்பாலை ஸ்ரீ வேதநாயகி உடனுறை ஸ்ரீ பால்வண்ணநாதர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்புவழிபாடு நடைபெறும். "திருக்கழிப்பாலைத் திருப்பதிகங்கள்" என்ற நூல் வழங்கப்பெறுவதுடன் தலத் தேவாரத் திருப்பதிகப் பாராயணமும், விளக்கவுரையும் நிகழ்த்தப்பெறும். பக்தர்கள் வந்து வழிபட்டுப் பயன் பெறுவார்களாக.

# செய்திகள்

## ஆசியக் கவிஞர்கள் தருமையாதீனத்துக்கு வருகை

ஆசியாகண்டத்திலுள்ள ஜப்பான், மலேசியா, பிலிப்பைன்ஸ், ஹாங்காங் முதலிய பல நாடுகளிலிருந்தும் நமது இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல மொழி ( புலவர் )க் கவிஞர்கள் மா நாடு அண்மையில் மூன்று நாட்கள் சென்னையில் நடைபெற்ற செய்தி அனைவரும் அறிந்தது.

இக்கவிஞர் மா நாடு முடிவுபெற்றதும் அவர்கள் தமிழகத்தில் உள்ள பல்வேறு இடங்களுக்கும் சுற்றுலாவாகச் சென்று கண்டு வந்தார்கள். அவ்விதம் வருகையில் தென்னிந்தியாவில் புகழ் பெற்ற சமய நிறுவனங்களில் ஒன்றாகிய தருமையாதீனத் திரு மடத்தில் 25—6—75 அன்று மாலையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைத் தரிசிக்க வந்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருமுன்னர் அவர்களுக்கு நல்லதொரு வரவேற்புவழங்கப்பட்டது. தருமையாதீன வரலாறு, கொள்கைகள், அது ஆற்றிவரும் அரும்பணிகள்பற்றி விளக்கமாகத் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், புலவர், திரு. இரா. செல்வக்கணபதி பி. ஏ., நல்லதொரு கவியமைப்பில் வரவேற்புரை வழங்கினர். சென்னை திரு கண்ணன் சீனிவாசன் அவர்கள் நன்றியுரையை ஆங்கிலத்தில்-கவியாப்பில் தெரிவித்துக் கொண்டார்கள். தாங்கள் செய்த நல்வினைப்பயனால் இந்தப் பெருமைசான்ற குருபீடத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தைத் தரிசிக்கவும் அவர்கள் ஆசியைப் பெறவும் இன்று வாய்ப்புக் கிடைத்தது என்ற கருத்தில் அது அமைந்திருந்தது. மற்றும் ஸ்ரீமதி. மாணிக்கவர்மா ஆங்கிலத்திலும், ஸ்ரீமதி. பாறோ தீர்த், பர்சிய மொழியிலுமாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள்

சென்னை இந்திப் பேராசிரியர் டாக்டர் திரு. வேங்கடராசலு அவர்கள் 'இப்போது இந்த உயர் ஞானபீடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முன்பு சென்னையில் ஆதீனப் பிரசார நிலையத்தில் அமர்ந்து தொண்டாற்றிய

காலத்தில், தாம் அவர்களைக்கண்டு தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றேன். அப்பொழுது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்றுகூறி, அதைத் தெரிவித்துக்கொண்டார்கள். அதன் சுருக்கம் :–

நான் சொல்லின்செல்வர் டாக்டர். திரு. ரா. பி. சேதுப்பிள்ளையின் மாணவன். கம்பராமாயணம், துளசிராமாயணம் இவற்றை ஒப்புநோக்கி ஆய்வுக் கட்டுரை எழுத முற்பட்டிருந்தேன். அதில் சில ஐயப்பாடுகள் எழுந்தன. அவைகுறித்து எனது ஆசிரியரை நாடிக் கேட்டேன். அவர்கள் 'சென்னையில் உள்ள தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் உள்ள சுவாமிகளை அடைந்து தீர்த்துக்கொள்க' என்று பணித்தார்கள். அவ்வண்ணமே அங்குச் சென்று சுவாமிகளைக் கண்டு எனது ஐயங்களை விரித்துரைத்தேன். அதற்கு சுவாமிகள் அங்குள்ள நூல் நிலையத்திலிருந்து சில நூல்களைக் கொடுத்து, படித்துப் பார்க்கும்படியும், அது முடிந்ததும் அதுகுறித்து ஒரு முடிவெடுக்கலாம் என்றும் குறிப்பிட்டார்கள்.

துளசிதாசர் இராமாயணம் எழுத முற்படுவதற்கு முன்னர் குமரகுருபரர் வாரணசியில் நிகழ்த்திவந்த கம்பராமாயணத்தைக் கேட்டதன் பயனாகவே அவருக்கு (துளசிதாசருக்கு) இந்தியில் இராமாயணம் இயற்றவேண்டுமென்ற உணர்வு உண்டாயிற்று ஆகவே கம்பனது நூலைத்தழுவியே துளசிதாசர்ராமாயணத்தை இந்தியில் இயற்றினர் என்பர், இது குறித்துக் கால ஆராய்ச்சி ஒருபுறம் இருக்க கருத்து ஒற்றுமை குறித்தும் ஆராய்ச்சி ஒப்புமைகள் காண முற்பட்டேன். அதில் ஒன்று சீதாபிராட்டியைத் திருமணம் கொள்ளுவதற்கு இராமன் மிதிலைக்கு அழைத்துவரப் பட்டபோது அரண்மனை மேன்மாடத்திலிருந்த சீதாதேவியை அண்ணலும் நோக்கினன் ; அவளும் நோக்கினள். இருவரும் காதல் கொண்டனர். அதன் பிறகுதான் வில்லொடித்தது ; திருமணம் முடிந்தது முதலிய நிகழ்ச்சிகள். இது கம்பன் கூற்று. இதனைத் துளசிதாசர் சொல்லும்போது 'சீதை ஒருநந்தனவனத்தில் தன்தோழியரோடுவிளையாடிக்கொண்டிருந்ததாகவும், அங்கு இராமன் வருகை புரிந்ததாகவும், அப்பொழுது அண்ணலும் நோக்கினன் ; அவளும் நோக்கினள். இருவரும் கருத்தொருமித்துக் காதல் கொண்டனர் என்று குறிப்பிடுகிறார். திருவள்ளுவர் "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில" என்று இலக்கணம் சொல்லுவார். இது எவ்விதம் பொருந்தும் என்பதே எனது ஐயம்.

மீண்டும் சுவாமிகளிடம் சென்று, 'சுவாமிகள் கொடுத்த நூற்களை எல்லாம் படித்து முடித்தும் எனது ஐயம் நீங்கினபாடில்லை' என்றேன். அப்பொழுது சுவாமிகள், "ஸ்ரீவைகுண்டத்தில் வீற்றிருந்த திருமாலும் லட்சுமிதேவியும் இராவணவதத்தை முன்னிட்டு இந்நிலவுலகில்வந்து அவதரித்தனர். அவர்கள் மீண்டும் முதன்முதலில் மிதிலையில் கூடினார். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? அந்தத் தெய்வீக சம்பந்தந்தான் திருமணத்துக்கு முன்னரே இவ்விருவரும் ஒருவரை ஒருவர் கண்டதும் காதல்கொண்டது" என்றும், இது தெய்வீகக் காதல் என்றும் அருமையானதொரு விளக்கம் தந்தார்கள். இது போன்ற ஆழமான மொழியறிவும் நுனித்தறியும் ஆராய்ச்சித் திறமும் கேட்போர் வியக்கும்வகையில் விளக்கம் தரும் ஆற்றலும் மிக்கவர்கள் இவர்கள். இவர்களைத் தரிசித்துப் பல ஆண்டுகள் ஆகியும் என்னையும் இப்போது இங்கே அடையாளம் கண்டு கொண்டார்கள். என் நிலையும் மேலே சொன்னதுபோல 'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ" என்பதே என்று முடித்தார். அடுத்து நன்றியுரைக்குப் பின்னர் ஆசியக் கவிஞர்கள் அனைவருக்கும் அறுசுவைவிருந்து அளிக்கப்பெற்றது.

## வேளூரில் சம்வத்ஸராபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 27—6—75 வெள்ளிக்கிழமையன்று திருவோண நக்ஷத்திரத்தன்று சம்வத்சராபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை, ஸ்ரீ வைத்தியநாதசுவாமி, ஸ்ரீ தையல்நாயகி, ஸ்ரீ ஆறுமுககுமாரர், ஸ்ரீ அங்காரகன், ஸ்ரீ சண்டிகேசுவரர் ஆகிய மூர்த்திகளுக்கு ருத்ரஜெபம் முதலியவற்றுடன் அபிஷேகமும், வேதபாராயணம், திருமுறைப் பாராயணம் முதலியனவும், ஆஸ்தான மண்டபத்தில் பஞ்சமூர்த்திகளுக்கும், ஸ்ரீ அங்காரகன், ஜடாயு முதலிய உற்சவ மூர்த்திகளுக்கும் அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றன.

மாலையில் ஸ்ரீ வைத்தியநாதப்பெருமானுக்கு பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ தையல்நாயகிக்கு நவசத்தியருச்சனையும், ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கும், ஸ்ரீ சண்முககுமாரருக்கும் சண்முகார்ச்சனையும், ஸ்ரீ விநாயகருக்கும் ஸ்ரீ அங்காரகனுக்கும் சகஸ்ரநாமார்ச்சனையும் பின்னர் மண்டபதீபாராதனையும் பிராகாரத்தில் வலம் வருதலும் நிகழ்ந்தன. அன்று மாலை 6 மணி அளவில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியரும், தருமையாதீனத் தமிழ்ப்புலவருமான, வித்துவான், சிரோமணி திரு. வி. சபேசன் அவர்களால் "வேளூர்த் திருப்பதிகங்கள்" என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் வந்து வழிபட்டும் சொற்பொழிவைக் கேட்டும் பயன் பெற்றனர்.

### சென்னை சமயப் பிரசார நிலையத்தில்,

## மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்திர சமயப்பிரசார வழிபாடு 29—6—75 ஞாயிற்றுக்கிழமையன்று, குமரக்கோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்தும், எல்லாச் சந்நிதிகளிலும் அருச்சனைகள் செய்தும் வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. வழிபாட்டிற்குப் பின்னர் சமயப் பிரசாரம் நடைபெற்றது.

புலவர் திரு. K. ஆறுமுகம் அவர்கள் “ முருகன் பெருமை ” என்ற பொருள்பற்றியும், திரு. V. S. கந்தசாமி அவர்கள் “ சமயம் ” என்ற பொருள்பற்றியும், சென்னை, வழக்கறிஞர். திரு. பழனியப்பன் அவர்கள் “ சமயப் பிரசாரம் ” பற்றியும், குமாரி. கௌரி அவர்கள் “ பக்தி நெறி ” பற்றியும், வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் “ ஆலய வழிபாடு ” பற்றியும் விரிவுரையாற்றினார்கள்.

திரு. இராமமூர்த்திஐயர் அவர்களும், குமாரி கௌரி குழுவினரும் முருகன் பாடல்களைப் பாடினர். திரு. S. ஞானப்பிரகாசம், புலவர். திரு. கு. புண்ணியகோடி ஆகியோர் திருமுறைப் பாடல்களையும், அபிராமி அந்தாதியையும் பாராயணம் செய்தனர். திருக்கோயில் அறங்காவலர்கள் வழிபாட்டுக் குழுவினரைவர வேற்று, உடனிருந்து வழிபாடுசெய்வித்தார்கள். வழிபாட்டுக் குழுவினருக்குப் பிரசாதங்கள் வழங்கப்பெற்றன. பக்தர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

### திருச்செந்தூரில்

## திருமுறைவகுப்பும் பெரியபுராண விரிவுரையும்

திருச்செந்தூரிலுள்ள தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில், தருமையாதீனஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவன்று ( 30—5—1975 ) திருமுறை வகுப்பும் பெரியபுராண விரிவுரையும், திருச்செந்தூர் பள்ளித் தலைமையாசிரியர் திரு. R. சுந்தரம் அவர்கள் தலைமையில் தொடங்கப்பெற்றன. திருமுறை வகுப்பில்; தேவார இசைமணி திரு ஆ. சங்கரன் அவர்கள் சிறுவர்களுக்குத் தேவாரப் பாடல்களைப் பயிற்றுவித்தார்கள் மேலும் திரு. ஆ. சங்கரன் அவர்களால் சைவ சமய நாயன்மார்கள் குருபூஜை விழா நாட்களில்

வழிபாடு நிகழ்த்தி பெரியபுராணப் பாடல்களைப் படித்து விளக்கமும் சொல்லப்பெறுகின்றன. திருமுறை வகுப்பு நாள்தோறும் மாலை 5 மணி அளவில் நடைபெறுகிறதும். தேவார வகுப்பு மாணவர்களும் அன்பர்களும் கேட்டுப் பயன் பெறுகின்றனர்.

சுசீந்திரத்தில்

## திருமுறைவகுப்பும் பெரியபுராணவிரிவுரையும்

சுசீந்திரத்திலுள்ள தருமையாதீனம ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில், தருமையாதீனஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவன்று (30—5—1975) திருமுறை வகுப்பும் பெரிய புராண விரிவுரையும், வட்டப்பள்ளி, டாக்டர். திரு. பி. என். சர்மா அவர்களால் தொடங்கப்பெற்றன. திருமுறை வகுப்பில் சிறுவர்களுக்கு திரு. தி. ஆ. திருஞானசம்பந்தம் அவர்களால் தேவாரப் பாடல்கள் பண்ணிசையுடன் பயிற்றுவிக்கப்பெற்றது. பெரியபுராண விரிவுரை சமயப் பிரசாரமணி, திரு. சு கந்தசாமி பிள்ளை அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. சைவ சமய நாயன்மார்கள் குருபூஜை நாட்களில் பெரியபுராண விரிவுரை தொடர்ந்து நிகழ்த்தப்பெறுகிறது. திருமுறை வகுப்பு நாள்தோறும் மாலையில் 5 மணி அளவில் நடைபெறுகின்றது.

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

I had been a magistrate of Sirkali in 1960, and I used to praise the efficient administration of this temple To day I came to have dharsan of Lord Sattanatha and to day I find the same kind of efficiency in the administration of this temple. I praise all the members of the staff and offer my respects to our Gurumahasannidanam for the able maintenance of our temples and propagation of our religion and fostering the spirit of worship amongst our people.

Sd. G. Amirtharajan, M. A., B. L.,

18—5—75 Chief Judicial Magistrate, Kumbakonam.

# எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஆசிரியர்,

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( ஸ்ரீ இராக்ஷஸஹு ஆடிமீ 1உ முதல் 31உ முடிய )

( 17—7—75 முதல் 16—8—75 முடிய )

| | | | |
|---|---|---|---|
| குரு | செ | ல<br>கே | பு<br>சனி |
| | இராசி<br>3உ கட பு<br>8உ மே குரு<br>19உ ரிஷ செ<br>20உ சிம் பு | | சூ |
| | | | சு |
| | ரா | சந் | |

ஸ்ரீ இராட்சஸஹு ஆனிமீ 32உ புதவாரம் தட்சிணாயண புண்ணியகாலமாகும். சுவாதி நக்ஷத்திரமும் பாலவகரணமுமாகிய தினத்தில் சூரிய உதயம் முதல் 51 நாழிகை 16 விநாடிக்கு ரிஷப லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் உலக சுபிட்சத்தை முன்னிட்டு கடகராசி சங்கிரமணமாக ஸ்ரீ இராட்சஸஹு ஆடி மாதப்பிரவேசம் செய்கிறூர். ஸ்ரீ குருபகவான் சஸ்ஸியாதிபதியாகிறூர். சங்கிரமண தேவதை குரூரமுகத்துடன், புலிவாகனத்தில் கட்க ஆயுதம் ஏந்தி. இரசத குடை பிடித்து, கிழக்குத்திக்கில் பயணமாகிறூர். அதன் பலன் உலகெங்கும் நல்ல மழை பொழிந்து, சஸ்லிய தானிய பயிர்கள் விருத்தி ஏற்பட்டு தேசங்களில் சுபிட்சம் ஏற்படும், தேசங்களில் அக்கிரமவாதிகளால் ஏற்படுகின்ற குழப்ப நிலைமை, தீச்செயல்கள் நீங்குதலாகி ஆளுநர்களின் நீதி பரிபாலனம் சீர்திருத்த முறையில் நடைபெறுவதாகும். உலகெங்கும் ஏற்பட்டுள்ள தர்ம ஸ்தாபனங்கள் செயல்படும். திருமடங்கள் ஆசாரியபீடங்களால் நிர்வகிக்கப்படுகின்ற மதாச்சாரம், தெய்வ நெறி முறைகள் பெருகும்படி காக்கும். நீதி பரிபாலனம் சிறந்து

செங்கோல் உயரும். தேவாலயங்களில் சிறப்புப்பூஜைகள் நடைபெறும். அதனால் தேசசுபிட்சம் ஏற்படும். சகல பிரஜைகளும் தெய்வ உணர்வு உடையவர்களாகி செய்தொழில்களில் வளம் பெற்றுச் சிறந்து வாழ்வார்கள்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

(சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ – அ.)

மேஷராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் முதல் வாரம் சுமார் பலனாகவும் மற்றவாரங்கள் சிறப்புப்பலன்களாகவும் நடைபெறும். 7க்குரிய சுக்கிரன் இம்மாதம் 7உ வேதை நீக்கம் பெற்றுத் திகழ்வதால் தனவசதி சரளமாக இருந்துவரும். குடும்பம் சுபகரமாக இருந்துவரும் இம்மாதம் 19உ ரிஷபராசியை அடையும் செவ்வாய் சமத்துவகேது சம்பந்தத்தால் வாக்கு கடுமையும் சுக்கிரன் குரு பார்வையால் வாக்குப்படி நிறைவேற்றும் ஆற்றலையும் பிரபலத்தையும் கொடுக்கும். 3, 6 க்குரிய புதன் இம்மாதம் 3உக்குமேல் கடகராசியை அடைவதால் சகோதரருக்கு அரசாங்க நிர்பந்தமும் செலவுமாக இருந்துவரும். சந்திரலக்கின முதல் 5 இராசிகள் வரை இருக்கின்ற கிரகங்களால் தானதரும கைங்கரியங்களும், பிரபலஸ்தர்கள் வருகையும், புகழுரைகளும், நன்மதிப்பும் ஏற்படுகின்ற இலட்சுமிகடாக்ஷம் உண்டாகும். புதன் அஸ்தங்கத்தால் சத்துரு பங்கம் ஏற்படும். கணவன் மனைவிக்குள் இம்மாதம் 19உ முதல் சர்ச்சையும் குருவீட்சணம் இருப்பதால் உடனுக்குடன் சமாதானமும் ஆகும். 5க்குரிய சூரியன் 4ல் இருந்து அதன் நற்பலஸ்தானத்தில் இருக்கிற கிரகத்தால் இராசாங்க பிரபலத்தையும், எதிலும் மனோதைரியமாகச் செயல்படும் ஆற்றலையும் காரிய ஜெயத்தையும் ஏற்படுத்தும் செய்தொழில் அல்லது உத்தியோகம் இலாபகரமாக நடந்து வரும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

(இ. ஊ ஏ. – ஒ வ. வி வூ. – வே வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமார் பலனாக நடைபெறும். 2 க்குரிய புதன் சஞ்சாரத்தால் தனம் நாளுக்கு நாள் விருத்திகரமும் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளும் ஏற்படும். 12ல் உள்ள சனியால் வாக்கு பிறர் ஏற்காத நிலையில் சிறிது மனோவாட்டம் காட்டும். மூதாதையர் பொருள் வரவேண்டியதிலும் செய்தொழிலிலும் முயற்சியில் சிரமபலன் போல் தோற்றும். தெசாபுத்தி அனுகூலமாயின் அவ்விதம் தோன்றாது. சுக்கிரன் சனி பார்வையால் பித்த மயக்கமும் விடு. கால்நடை வாகனங்களின் பிராப்தியில் சிரமத்தின் மேல் அனுகூலங்களும் ஏற்படும். செவ்வாய் குரு நிலைமையால் மனைவி சம்பந்தமான

அவசிய செலவு ஏற்படும். புத்திரர்கள் கல்வி தொழில்துறைகளில் முன்னேற்றத்துடன் விளங்குவார்கள். இராசாங்கத்தில் கூட்டு மன்றங்களில் தலைமைப்பதவி கிட்டும். கிரியை ஸ்தானாதிபதியின் அம்ச நாதன் குரு வீட்சணம் பெறுவதால் செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மேலிடத்திலும் சமூகத்திலும் பெரும் பூசல்களாக இருந்தவை சூரியனைக்கண்ட பனிபோல் நீங்குதலாகி சுய கருத்துப்படி இயங்கும் நிலைமையை ஏற்படுத்தும்.

### 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ )

மிதுனராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிரமான பலனைத் தரும். 2ல் உள்ள கிரகங்களால் தனவசதி சீராக இருந்துவரும். எதிலும் தைரிய போக்கும் எழுத்து மூலியத்தில் இராசாங்கத்தில் தனச் செலாவணிகளும் இருந்துவரும். இம்மாதம் பிற்பகுதியில் செவ்வாய் விரயஸ்தானம் அடைவதால் சில கெடுபிடி நிர்பந்தச் செலவுகளும் விவசாயத்தில் அவசிய செலவும் ஏற்படும். சந்திராலக்கினத்திலும் அதற்கு இருபுறமும் உள்ள பாபர்களால் ஓர் கண்ட சம்பவமும் ஏற்படும் சகோதரர் பந்து அம்மான் இவர்கள் மிச்சிரமாக நடந்து கொள்வார்கள். பெரியோர் தக்கோர் அனுசரணைகளால் சிரமங்கள் நீங்கி நலம் பெருகும். புத்திரர்கள் ஒருபுறம் பிடிவாத போக்குடனும் ஒருபுறம் குலப்பெருமை காக்கும் உதார குணத்துடனும் இருப்பார்கள். கணவன் மனைவிக்குள் ஏற்பட்ட வெறுப்புணர்வு நீங்கி சந்தோஷம் நிலவும். இம்மாதம் சென்ம சனி அந்தமாகி குரு நல்ல நிலையில் இருப்பதால் பூர்வ பொருளில் ஓர் மாற்றமும் செட்டில்மெண்ட் போன்ற ஏற்பாடுகளும் நிகழும். செய்தொழில் அல்லது உத்தியோகம் பெருமதிப்புடன் விளங்கும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். 2க்குரிய சூரியன் இம்மாதம் 3உ முதல் 20உ முடிய புதன் சேர்க்கையுடனும் 2ல் சுக்கிரனும் இருப்பதால் தனச் செலாவணி சிறப்பு மிகுந்த நிலைமையில் இருக்கும். குடும்பத்தில் சுபகரம் ஏற்படும். சகோதரர்கள் முன்னேற்றம் குறித்துச் சில அவசிய செலவை ஏற்க நேரும். பந்து அம்மான்கள் விசுவாசமாக இருந்து வருவார்கள். சுய வீடு; வாகனங்களில் சீர்திருத்தங்கள் ஏற்படும். பால் பாக்கியம் இருந்துவரும். இம்மாதம் பிற்பகுதியில் வயிற்றுவலி சிரோபாதை போன்ற உபத்திரபம் வந்து

நீங்கும். புத்திரனுக்கு ஓர் கண்டம் அல்லது தன் ஸ்திரீக்கு செற்பத்தில் கோளாறு ஏற்பட்டு நீங்கும். மனைவி வகையில் மனசங்கட நிலைமையும் செலவுமாக இருந்து பின் அவை நின்று சந்தோஷ நிலைமையை ஏற்படுத்தும் தொழில் ஸ்தாபனத்தில் சிலமாறுதல்களை ஏற்படுத்தும். அலுவலர் சிப்பந்திகள் சுறுசுறுப்பாகவும் ஸ்தாபன முன்னேற்றத்துக்கு உழைப்பவர்களாகவும் இருந்து வருவார்கள். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் ஆதாயமாக இருந்துவரும்.

## 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மெ. – மோ. டா. டி டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும் 2க்குரிய புதன் 12ல் லக்கினாதிபதியுடன் சேர்ந்து இருந்து 11ல் கிரகம் இருப்பதால் தனவிஷயத்தில் பந்து மித்திரர்களிடையே மனவருத்தமாயினும் தனம் இலாபகரமாகவே இருந்துவரும். குடும்பத்தில் இலட்சுமிகரமான நிலைமையாக இருந்துவரும். 3, 10 க்குரிய சுக்கிரன் அசுபர் பார்வை பெறுவதால் சகோதரர் மனத்தாங்கல் சம்பவம் நேர்ந்து சமாதானம் ஆகும். 4, 9 க்குரிய செவ்வாய் இம்மாதம் 19உ ரிஷப ராசியை அடைவதால் மாதாவிற்கு தேக நலிவும் கால் நடை வாகனத்திற்கு விஷ பிடையும் ஏற்படுவதாகும். பொதுநல சேவையில் தீவிரம் ஏற்படும். சில சமயங்களில் காரணமற்ற மனோதிகில் ஏற்பட்டு நீங்கும். 5க்குரிய குரு இம்மாதம் நற்பலஸ்தானத்திலிருத்தலால் புத்திர பாக்கியத்தில் மகிழ்ச்சி நிலவும். இம்மாதம் 19உ வேதையில் கிரகம் வருவதால் புத்திரனுக்கு ஓர் விபத்து ஏற்பட்டு நீங்கும் இருமல் நெஞ்சில் சளி போன்ற தொல்லைகாட்டி நீங்கும். எவ்வித நிலைமையிலும் உறுதி மனப்பான்மையும் நெறிமுறையான செயல்களுமாக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் மிடுக்காக நடந்துவரும்.

## 6. கன்னி – உத்திரம் பின் ¾ – ஹஸ்தம் – சித்திரை முன் ½

(டோ. ப பி. – பு ஷ ண. ட. – பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமார் பலனாக நடைபெறும். 2, 9 க்குரிய சுக்கிரன் கோசார நற்பலஸ்தானத்தில் இருப்பினும் அசுபர் பார்வையால் பணவசதி சீராக இருக்கும். 3க்குரிய செவ்வாய் இம்மாதம் 19உ ரிஷப ராசியை அடைவதால் சகோதரர் குடும்பத்தில் சச்சரவும் அதிருப்தியும் ஏற்பட்டு நீங்கும் இரத்த சம்பந்தப்பட்டவருக்கு ஓர் கண்டம் வந்து நீங்கும். 4 7 க்குரிய குருவின் நிலையால் வீடு,

கால்நடை வாகனத்தில் சுமார் பலனாக இருந்துவரும். கணவன் மனைவியரிடையே சொல்லிக்கொள்ள முடியாத ஓர் கட்டுப் பாடான நிலைமை இருந்துவரும். 5. 6க்குரிய குரு நிலைமையால் புத்திரர் புத்திரிகள் சம்பந்தமாக ஓர் கவலையைக் கொடுக்கும். 9ல் உள்ள கிரகங்களால் பிதாவுக்கு இரத்தக்கோளாறும் அரிஷ் டமும்காட்டி நீங்கும். சொந்த வருமானத்தில் சிலரால் சிரமபலன் ஏற்பட்டு பிரபலஸ்தர்களால் நீங்கும். இராசாங்கத்தில் எழுத்து மூலமானகாலதாமதத்தில் நற்பலனை அளிக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மாறுதலும் அலைச்சலுமாக இருப் பினும் முன்னேற்றமுடையதாகும். அரியகாரிய முயற்சிகளில் நற்பலனை ஏற்படச்செய்யும்.

## 7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து தே.)

துலாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். 2க்குரிய செவ்வாய் சஞ்சாரத்தால் தனவசதி சிறப் புடன் இருந்துவரும். குடும்பநலம் பெருகும். 3க்குரிய குரு இம் மாதம் 8உ 7ல் வருவதால் சகோதரர் குடும்பம் சிறந்து விளங்கும். கோர்ட்டு வழக்குகளில் இம்மாதம் 19உ க்குமேல் நன் மையை உண்டு பண்ணும். வரவேண்டிய பழைய பாக்கிகள் வந்து சேரும். தீர்க்க ரோகங்கள் நீங்கி ஆரோக்கியம் ஏற்படும். தாரம், புத்திரர், பௌத்திரர்கள் க்ஷேமகரமாக இருப்பார்கள். சுயார்ச்சித பொருள்களில் சில மாறுதல்களை ஏற்படுத்தும். ஸ்திரீ மூலிய தன லேவாதேவிகளில் ஈடுபடுதலும் நன் மதிப்பும், ஏற்படும். மன உறுதியான நடைமுறை பெருமதிப்பை உண்டு பண்ணும். கிரியைஸ்தானத்தில் உள்ள கிரக அமைவால் பந்துக் கள் வருகை தருவர். குலாபிமான சகாயாதிகள் வழங்குதலாகும். இராசாங்க காரியம், லிகித ஒப்பந்தங்களில் நற்பலனையடைய ஏதுவாகும். மூதாதையர்களின் பொருள் கைகூடும். வித்தியா வியாபாராதிகளில் நல்ல ஆதாயம் இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் இராசகண்யம் பொருந்தியதாக இருந்து வரும்

## 8. விருச்சிகம் ¼ – அனுஷம் – கேட்டை.

(தோ. – ந. நி. நு. நெ. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடைபெறும். 2க்குரிய குரு இம்மாதம் 8உ 6ல் வருவதால் தனம் வரவும்செலவும் சமமாக இருக்கும். புத்திரர்கள் புறம்பாக நடந்து கொள்வார்கள். இம்மாதம் 19உ க்குமேல்

அதிபதியின் பலனைக் குரு கொடுப்பவராக மாறுவதால் குடும்ப நலம் பெருகும். புத்திரர்கள் கடும் போக்கிலிருந்து மாறுதலாகி குடும்ப நலத்துக்கு உதவிகரமாக இருப்பார்கள். சத்துருக்கள் மித்திரமாவார்கள். சகோதரர்கள் விசுவாசத்துடன் நடந்து வருவார்கள். 3, 4 க்குரிய சனீஸ்வரன் சகாயனாக மாறுவதால் வாழ்க்கைப் போராட்டத்தில் தைரிய போக்கும் சுகானுபவங்களும் மேலிடும். இரும்பு இயந்திரங்களில் எதிர்பார்த்த நன்மையை அடைய நேரிடும். சுக்கிரன் சுபர் பாவர் பார்வையடைவதால் கணவன் மனைவியரிடையே ஓர் சச்சரவு, மனோவேகம் ஏற்பட்டு மர்மஸ்தானத்தில் நோய் வந்து நீங்கும். நண்பர்களில் மனஸ்தாபசம்பவங்கள் ஏற்பட்டு உடனுக்குடன் சரிக்கட்டுதலாகும். புதன் சூரியன் நிலையால் வித்தியா வியாபாராதிகளில் நற்பலன் கிட்டும். அரசாங்கத்தில் பத்திரலிகிதங்களில் அனுகூலபலன்களை ஏற்படுத்தும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் ஆதரவு பலம்பெருகி பிரபலத்தைக் கொடுக்கும்.

## 9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் திசா புத்தி அனுகூலமாயின் நற்பலனாக நடக்கும் பலவீனமாயின் நற்பலன்போல் தோன்றி முடிவில் பலனற்று காணும். 2 க்குரிய சனி மிச்சிரனாக இருப்பதால் தனவசதி சீராக இருக்கும். இம் மாதம் 19உ க்குமேல் செய்வாய் ரிஷப ராசியை யடைவதால் சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். இருணங்கள் தீரும். சிவந்த வஸ்துக்களின் பிராப்தி ஏற்படும். 4க்குரிய குரு சகாயனாக வருவதால் அனவு வீடு வாகன வசதியும் புத்திர பாக்கியமும் உண்டாகும். புதன் சூரியன் நிலைமையால் வியாபாராதி தொழில் நிறுவன ஏற்பாடுகளில் அரசாங்க அனுமதி முதலான ஆயத்தங்களில் காலதாமதமாக பலன் ஏற்படும். கணவன் மனைவியின் வாழ்க்கையில் சந்துஷ்டி நிலவும். லாபாதிபதி பாபர் சுபர் பார்வை பெறுவதால் ஆதாய பிராப்தியில் சில தடைகளும், தஸ்தாவேஜுகளில் பணலேவாதேவிகளில் குழப்ப நிலைமையும் ஏற்பட்டு பின்னர் தடை நீங்கப்பெற்று தெளிவு ஏற்படும். பந்து மித்திரர், அம்மான் முதலியோர் உதவிகரமாக இருப்பார்கள். பத்திர லிகித மூலமான ஆதாயம் இருந்துவரும் வித்துவத்துறையில் புகழுரைகளும் வருவாய் மன மகிழ்ச்சியை உண்டுபண்ணும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சிறந்து விளங்கும்.

## 10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½
( போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – க. கீ. )

மகரராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். 2க்குரிய சனி இம்மாதம் மிச்சிரனாக இருப்பதால் தன வசதி சீராக இருக்கும். 3க்குரிய குரு இம்மாதம் 19உ க்குமேல் நற்பலனாக மாறுவதால் சகோதரர்கள் பிரபலஸ்திதியில் இருப்பார்கள். வீடு வாகனங்களில் சீர்திருத்தமும் வசதியும் ஏற்படும். புத்திரர்களுக்கு கல்வி தொழில் துறைகளில் முன்னேற்றம் ஏற்படும். வயிறு இதயம் இவற்றில் வலியேற்பட்டு நீங்கும். 6, 9க்குரிய புதன் நிலையால் பந்து அம்மான் விசுவாசமாக இருந்துவருவார்கள். வித்தியா வியாபாராதிகளில் அனுபவ திறமையால் நற்கியாதி ஏற்படும். 5, 10க்குரிய சுக்கிரன் பாபர் சுபர் பார்வையால் ஸ்திரீவகை திரவியங்களில் ஓர் சச்சரவு வந்து உடன் அனுகூலத்தை ஏற்படுத்தும். பழைய பாக்கி வசூலிப்பதில் சிரமம் காட்டும். புத்திரி சம்பந்தமாக சுபகாரிய ஏற்பாடுகள் நடந்துவரும். அதில் அநேக தடங்கல்களுக்கு இடையே சாதக நிலைமையும் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் வாதங்கள் நேர்ந்தாலும் சுபர் விட்சணம் இருப்பதால் பிரபலஸ்தர் ஆதரவு பலம் இலட்சியபோக்காக இருந்துவரும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி–¾
( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமாரான பலனைத்தரும். 2க்குரிய குருவின் நிலையால் தன வசதி சீராக இருந்துவரும். குடும்ப நலம் நன்றாக இருந்துவரும் சகோதரர் குடும்பம் பிரசித்த மேன்மையுடன் விளங்கும். இயந்திர சாதனங்களில் விவசாயத்தில் முற்போக்கான நிலைமையாக இருந்து வரும். வீடு வாகனங்களில் பழுதானவை சீர்படும். புதன் சூரியன் நிலையால் வித்தியா வியாபாராதிகளில் எழுத்து மூலிய லேவாதேவிகளில் நல்ல ஆதாயம் உண்டு பண்ணும். அரசாங்க கடித தொடர்புகளில் சகாயங்கள் ஏற்படும். இம்மாதம் 19உ க்குமேல் இருப்பிடத்தில் ஓர் சச்சரவும் அசுப சேதிகளும் மன அயர்வை உண்டுபண்ணும். செவ்வாயின் நற்பலஸ்தானத்தில் குரு இருப்பதால் சாத்மீக மார்க்கத்தில் சச்சரவை சமாளித்தலும், மேலோர் ஆதரவு வார்த்தைகளால் திட தைரியநிலைமையையும், கண்யமார்க்கத்தையும் ஏற்படுத்தும். தாரபுத்திரர்கள் மகிழ்ச்சிகரமாக இருப்பார்கள். தீர்க்க ரோகங்கள் விலகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நிர்பந்தமான செயல் முறைகளாக இருந்து வரும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

( தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி )

மீனராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடந்துவரும் 2க்குரிய செவ்வாய் சுபத்துவ ரீதியில் இருப்பதால் பணவசதி திருப்தியளிப்பதாக இருந்துவரும். குடும்பம் சுபகரமாக இருந்துவரும். சுக்கிரன் சுபர் பாபர் பார்வையால் சகோதரர் பிரபலமாயினும் ஒரு சில மன மாறுதல்கள் ஏற்பட்டு பின் சரிபடும் நிலைமையும். அவர்களுக்கு உடல் நலிவு காட்டி குணமாகுதலும் ஆகும். புதன் சூரியன் நிலைமையால் பந்து அம்மான் மிச்சிரமாக இருந்துவருவார்கள். பெற்றோரின் உடல் நலம் பாதித்து குணமாகும். தொழில் துறையில் கணக்கு வழக்கு ஒப்பந்தங்களில் விரோதபான்மையும் சர்ச்சையும் ஏற்பட்டு நீங்கும். புத்திரர்கள் புறம்பாக நடப்பார்கள். வயிற்றில் அஜீர்ணம் போன்ற உபத்திரவம் வந்து நீங்கும். பாக்கியாதிபன் நல்ல நிலையில் இருப்பதால் பூமி விருத்தியும் சிவந்தபொருள் பிராப்தியும் ஏற்படுவதாகும். இம்மாதம் ஜீவனாதிபன் நிலையால் செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அனுபவதிறமையால் மதிப்பும் ஆதாரமும் இருந்து வரும்.

---

### EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkali.

The delegates all over India and abroad especially from Iran, Malaysia, Ceylon and Thaiwan etc a pleasure to visit thi s temple. They find the temple is kept very clean and tidy. The Superintent in charge of tha temple is kind enough to show the delegates around the temple and he deserves a praise.

(Sd) Maria Teresa Rodrigues

from Goa,

26-6-75 (Sd) Rohini Gupta, Bombay.